உ

# மாயாவதி.

இஃது

திரிசிரபுரம்

பிரம்மஸ்ரீ. திரு- அ- சிவாநந்த சாகர யோகீசுவரர்

மருகரும் மாணாக்கருமாகிய

வரகவி-திரு-அ-சுப்பிரமணிய பாரதியார்

இயற்றியது

---

சென்னை

திருவல்லிக்கேணி,

"வாணீபூஷணம் பிரஸ்ஸில்"

பதிப்பிக்கப்பட்டது.

மேமீ

1911

Rig htsReserved]

[Price As. 8

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 2 FEB 1912 MADRAS

# முகவுரை

மாயாவதி என்னும் இந்த நாடகமானது ஸ்ரீமத் பாகவதம் தசமஸ்கந்தத்திலுள்ள ஓர் சிறிய கதை. இதனை, பிர்மஸ்ரீ எஸ். ராஜா சாஸ்திரியாரவர்கள் தமிழில் நாடகமாகச் செய்து தரும்படி, என்னைக் கேட்டுக் கொண்டமையால் அவருடைய கருத்துக்கிணங்கி நாடகமாகச் செய்து முடித்தேன்.

இந்நாடகமானது பாகவதத்திலுள்ளபடி அனுசரிக்கப்பட்டதாயினும் நாடகத்திற்குரிய நவரசங்களும் அமையும் வண்ணம்பல விஷயங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. தவிர இந்நாடகம், படிப்பவர்க்கு இன்ப மளிக்கத் தக்கதாகவும் நடிப்பவர்க்கு வேண்டிய பாடல்க ளுடனும் அமைக்கப் பட்டிருக்கிறது.

‘‘நாடகங்களும் நாவல்களும் படிப்பதனால் பயனென்னுளது? வீண் காலப் போக்கே யொழிய வேறில்லை’’ யென்று நினைப்பாருமுளர். அது முற்றும் பிழை யென்றே கூறுவோம். நாடகங்களும் நாவல்களும் குழந்தைகளுக்கு விளையாட்டுக் காட்டிச் சோறூட்டுவது போல் படிப்பவர் மனதிற்குச் சந்தோஷ மளித்து, மானிட ஜன்ம மெடுத்தவர்கள் இகபர சாதகத்தை முன்னிட்டு அடைய வேண்டிய அறிவாகிய அமுத மளிப்பன வாகையால், அவைகளைப் படிப்பது பயனற்றதென்று கருதுதல் பேதமையே யாம்.

நந்தமிழ் நாட்டில் இப்பொழுது ஆங்கிலங் கற்ற வாலிபர்களும் ஸ்திரீ ரத்நங்களும், தமிழைப் பாராட்டி மன மகிழ்ந்து படிப்பதற்கு, இப்போது வெளி வந்துலாவும் நாவல்களும் நாடகங்களுமே காரணமானவை. இப்படி ஏற்படவில்லையாயின் தமிழ்ப் பாஷையைப் பாராட்டிப் படிப்பவரை காண்பது மிகவும் அரிதாகுமென்பதையாம் கூற வேண்டுவதில்லை.

ஆகையால் இத்தகைய பயனையும் நம் தமிழ்ப் பாஷையின் அபிவிருத்தியின் நோக்கத்தையும் கருதி இந் நாடகத்தை வெளியிடலானேன்.

நாடகமும் நாவல்களுமாகப் பல புத்தகங்களிருப்பினும் "ஆசானுரைப்ப தமைவறக் கொளினுங், காற் கூறல்லது பற்றலனாகும்" என்பது போல் மாந்தர்கள் அநேக நூல்களைப்படிப்பினும் பெறும் பயன் சிறிதனவேயாகு மாதலால், மேன் மேலும் புத்தகங்கள் படிக்கவேண்டு மென்கிற அவசியத்தை முன்னிட்டு இதனை எழுதி வெளியிடலானேன்.

கல்வியிற் றேர்ந்தவர்கள் முன்னிலையில் இப்புத்தகம் நில்லாதென்பது என் துணிபு ஆயினும் அவர்கள் குற்றங்களைப் பாராட்டாது குணங்களே கொள்வார்களென்னும் துணிபே முன்னின்று தூண்டலானேன். அவ்வாறே இந்நூல் கற்றறிந்த பெரியோர்களால் ஆதரிக்கப் படவேண்டு மென்று எங்கு நிறைந்த பரம கருணாநிதியின் திருவடியைச் சிர மேற்கொண்டு பிரார்த்திக்கிறேன்.

நீலகிரி.
23—5—11 } வரகவி-திரு-அ. சுப்பிரமணிய பாரதி.

## கதைச் சுருக்கம்.

முப்பரம் பொருளுக்கும் மேலாய் விளங்கும் சிவ பெருமானது நெற்றிக் கண்ணின்று தோன்றிய அக்கினிக் கிலக்காகி உருக்குலைந்த பன்மதனை மீண்டும் அடைவான் வேண்டி, இந்தப் பூவுலகில் வந்து மாயாவதி யெனப்பெயர்பூண்டுதவம்புரியக்கருதியிருந்த இரதி தேவியை, சப்பரன் என்னும் அசுர அரசன் சிறை யெடுத்துத் தன்னுடைய இராஜ்யமாகிய சப்பர புரியில் வைத்திருந்து அவளை பணந்து கொள்ளச் சமயம் பார்த்திருந்தான்.

இப்படி யிருக்கையில் துவாரகையில் வசித்து வந்த கிருஷ்ண பகவானுடைய திருவருளால்மன்மதன் ஸ்ரீருக்மிணியின்கர்ப்பத்தை அடைந்து ஜனனமாகி பிரத்யும்னன் என்னும் பெயரை யடைந்தான்.

அவன் பிறந்ததும், அவனைச்சம்பராசுரனுக்குப்பகைவனென வறிந்த நாரதர், சப்பரன் முன்தோன்றி பிரத்யும்னனது உற்பத்தியையும்அவன் தான் உன்பகைவனென்றும் கூறினர். அதைக் கேட்டதும் அசுரன் வெகுண்டு அக்கணமே துவாரகைக்கேகிதன் மாயா சக்தியால் ருக்மிணியின் பிரசவ அறைக்குட் புகுந்து ஒருவரையும் அறியாமல் குழந்தையை யெடுத்து வெளிப்போந்து கடலில் எறிந்து தன்நகரம்வந்து, பகையைக் களைந்து விட்டோமென்று மகிழ்ந்திருந்தனன்.

அந்தக் குழந்தையைக் கடலிலிருந்த ஓர்பெரியமீன் விழுங்கிற்று. பிறகு அம்மீன் பகவானுடைய திருவருளால் சம்பரபுரியிலுள்ள அசுரச் செப்படவர்களுடைய வலையிற் சிக்கியது. அவர்கள் அம்மீனைச் சம்பராசுரனிடம் கொண்டு வந்து கொடுத்து வெகுமதி பெற்றுச் சென்றார்கள். சப்பபன் அம்மீனைச் சமைக்கச் சமையலறைக்கனுப்பினான். சமயற்காரி சமைக்க அம்மீனை அரிந்தபொழுது அதன் வயிற்றில் ஓர் குழந்தை யிருக்கக் கண்டு ஆச்சரியமடை

ந்து அதை அசுரர் ஒருவரு மறியாமல் அப்பொழுது சமைய
லரைக்குக் காவலாக வைக்கப்பட்டிருந்த மாயாவதி யிடம் கொடுத்
தாள். மாயாவதி அக்குழந்தையை மன மகிழ்ச்சியோடு அவ்விட
மிருந்து பெற்றுக் கொண்டு அந்தோ! இக்குழந்தையை அசுரரை
யறியாமல் வளர்ப்ப தெங்ஙன மென வருந்திக் கொண்டிருக்கையில்
நாரதர் மாயாவதி தனியே யிருக்கும் அத்தருணம் பிரவேசித்து
குழந்தை யின்னாரென்பதையும் அவனால் அசுரன் மாய்வது திண்
ணம் என்றும் அசுரனிட மிருந்து தப்பும் விதத்தையும் கூறி அவ
ளுக்குப் பூர்வ ஞான முண்டாகும்படி செய்து அசுரனைக் கொல்ல
உபாயத்தையும் மாயாவித்தையையும் உபதேசித்துச் சென்றார்.
மாயாவதி அதன் பிறகு மன மகிழ்ச்சியோடிருந்தாள். அசுரன்
மாயாவதியைச் சேர நயத்திலும் பயத்திலும் முயன்றான். மாயா
வதி தனக்கு நாரதர் கூறிப் போந்தபடி "நான் எடுத்துள விரத
முடிய முப்பது நாள் செல்லும்; பிறகு உன்னிஷ்டப்படி யாகட்டு
மெனப் போக்குக் காட்டி அசுரன் தொந்தரவு செய்யும் அச்சமயம்
தப்பினாள். பிறகுமாத முடிவில் ப்ரத்யும்னனாகிய குழந்தை வாலி
பனாகி அசுரன் மாயாவதியிடம் வாதாடும் சமயம் அவனோடு அமர்
புரிந்து அவனைக் கொன்று, மாயாவதியுடன் ஆகாச மார்க்கத்தில்
துவாரகை சென்று கிருஷ்ண பகவான், ருக்மிணி முதலானவர்களி
ருக்கும் அந்தப்புரத்தில் பிரவேசித்தான். அவர்கள் இவர்களைப்
பார்த்து யாரிது வென ஆச்சரியமும் ஐயமு மடைந்தார்கள். அப்
போது நாரதர் அங்குப் போந்து அவர்களின்னாரெனக் கூறி ஆதி
முதல் நடந்தவைகளைத் தெரிவித்து அவர்களுக்கு மணஞ் செய்வி
க்கும்படி கிருஷ்ண பகவானுக்குச் சொன்னார். கிருஷ்ண பகவான்
நாரதர் கூறியபடியே அவர்களுக்கு விவாக முடித்தார்.

**கதைச் சுருக்கம்.**

முற்றிற்று.

உ

செந்திலாண்டவன்

திருவடி துணை

# மாயாவதி.

### விநாயகர் காப்பு

அகிலமு முயிரு மாகி யவையெலா மன்றி வேறாய்த்
திகழுமெய் ஞான னந்தத் தேசுரு வாகி முக்கட்
பகவனார் மகனா யன்பர் பவமறக் கருணை நல்கும்
முகிலுமா யிலகும் வேழ முகனிரு சரண்காப் பாமே

### குருவணக்கம்

சிந்தனை கடந்தொளிர் சின்மயா நந்தனெங்
கந்தனைச் சந்ததம் வந்தனை செய்சிவா
நந்தனை நவையிலா நற்றமிழ்ப் போதனை
தந்தெனைப் புரந்தமா தவனையாம் பணிகுவாம்

### மங்களவாழ்த்து.

சொர்க்க மத்திய பாதாளமென்கிற மூவுலகங்களையும் தன தாண்மைக்குள்ளாக்கி ஏகசக்ராதிபதியாக விருந்து அரசுபுரிந்துவந்த சூரபத்மனென்னும் ஓர் அசுரனுடைய கொடுங்கோன்மைக் கஞ்சித் தமது திருவடி மலரிற் சரண்புகுந்த பிரமனாதி தேவர்கட்கு "அஞ்சேல்" என அபயப் பிரதானமளித்து, அதிபல பராக்ரம சாலியும் தவவலியிற் சிறந்தவனும் அடங்காத தீரனுமாகிய

அந்தச் சூரபத்மனைத் தமது திருக்கரத்திலிலகும் வேலாயுதத்திற் கிரையாகத் தந்து, ஆருயிர்கட்கு இன்பமளித்த பரமகருணாநிதியா கியசுப்பிரமணியக் கடவுள் சர்வஜகத்துக்கும் மங்களமருள்வாராக.

## பிரஸ்தாவனை

ஸூத்ரதார்:—(நேபத்தியத்தை நோக்கி ஓர் சார்பாக நின்று) நடீ! ஏன் இன்னும் தாமதம்? மணி ஒன்பதாய் விட்டதே.

நடிபிரவேசிக்கிறாள்

நடி:—(இதோ வந்து விட்டேன் என்று சொல்லிக் கொண்டே வந்து தலைகுனிந்து கைகூப்பிக்கொண்டு) ஐயா! வந்தனமளிக்கின் றேன்; தமதாக்ஞையாது? அதன்படி நடக்கச் சித்தம்.

ஸூ:—நடீ! (சபையை நோக்கி) கண்ணுற்றனையா இச்சபையின் விநோதத்தை! எப்படி யிருக்கின்றது? இந்திர சபையோ அதன் மேலதோவென்றையுறு மாறல்லவா காண்கின்றது? கல்வி கேள்விகளிற் றேர்ந்த கனவான்களும் தனவான்களு மல்லவா வந்து குழுமியிருக்கின்றனர். இதுவன்றி இச்சபை யின் கண் என்றும் வந்திராத ஸ்திரீரத்னங்களும் அல்லவா வந்து நிறைந்து சபையை அலங்கரித்துங் கொண்டிருக்கின் றனர். இன்று இச்சபை மனதுக்கு ரம்மியமாயும் பார்வைக்கு வெகு அலங்காரமாயும் இருப்பதன் காரணம் அறிவாயா?

நடீ:—ஐயா! உண்மையிலேயே சபை வெகுரம்மியமாகத் தானி ருக்கிறது. இதன் காரணம் விளங்கவில்லை.

ஸூ:—நடீ! விளங்கவில்லையா? இன்று நடத்தப் போகும் நாடகம் என்ன? நவரசங்களும் அமையப்பெற்ற மாயாவதி யென்னும் ஓர் அற்புத நாடகமல்லவா? அதன் பொருட் டென்பதை நீ யறியாயோ?

நடி:—(சற்று நிதானித்து) ஆமாம்: அறிவேன்; என் மனமும் கண்ணும் சபையின் விநோதத்தைக் கண்டு மகிழ்வதிலேயே நின்று விட்டன. அதனால் தங்கள் கேள்வியைக் கவனியாம

விருந்து விட்டேன். மாயாவதி என்பது ஓர் அற்புத நாடக மென்பதையும் இன்று சபை வெகு சிறப்படையும் என் பதையும் அறிவேன். இந்திரியங்கள் நிலைத்திருப்பதில்லை. பலவழிகளிலும் செல்கின்றன.

ஸூ:—நடீ! முதலில் நானும் சபையின் வினோதத்தைக்கண்ட மகிழ்ச்சியில் மெய்மறந்து விட்டேன். நாம் நாடக மாடத் தொடங்குமுன், இச்சபையார் நம்மிருவரையும் பரமானந்த சாகரத்தில் மூழ்கும்படி செய்து தங்கள் வசப்படுத்திக்கொண்டனரன்றோ? அதுபோல் நாமும் அவர்களுக்கு ஆனந்தமளித்து, அவர்களுடைய பஞ்சேந்திரியங்களும் நம் நாடகக் கோலங்காண்பதில் நிலைத்திருக்குமாறு செய்ய வேண்டும். முந்தி ஒரு பதம் பாடுபார்ப்போம்; உலகத்தில் சங்கீதமே மனதுக்கு இரஞ்சிப்பையும் இன்பத்தையுந் தரத் தக்கது. இதனைவிரும்பாதவர் மிகவும் அரிது. தொட்டிலிற் படுத்து அழுதுகொண்டிருக்கும் சிசுக்கள் கூடத் தங்கள் தாய்மார் பாடும் தாலாட்டுக்குச் செவி சாய்த்து, அழுகையை நிறுத்திக்கொண்டு கானவின்பத்தில் ஆநந்த மடைவதை நாம் பார்த்திருக்கிறோமல்லவா? சங்கீதம் மனிதவர்க்கத்தாருக்குமட்டும் ஆநந்த முண்டாக்குமென்பதில்லை. விலங்கினங்களுக்கும் ஓர்வித இன்பத்தை யளித்து, அவைகளுடைய உள்ளத்தைக் கவர்ந்து உருகும்படி செய்து விடும். ஆகையால், இச்சபையார் மனமுருகும்படி பாடிக்காண்பிப்பிப்போம். [பாடுகிறாள்.

இராகம் பியாக் ஆதிதாளம்

இராஜாத்திவா—என்றமெட்டு

பல்லவி

இன்னமும்வாதா என்னுயிர் நாதா
இன்னமும் வாதா இரங்கலாகாதா

சரணம்

மதிமுகமுறவலென்-மனதினையுறக்குது
வாகுவினழகோவென் ஆகந்துளைக்குது
மாதெனையாதரிக்க நீவா வா வா—இன்

கண்களினழகெனைக் கனன்மெழுகாக்குது
காமன்கைக்கணையோவென் கருத்தினைக் கலக்குது
கைகுவித்துத் தொழுவேன் நீ வா வா வா—இன்
கன்னஞ்சோவுன்னெஞ்சம் கலங்குதே யென்னெஞ்சம்
கண்டகண் கணமுனை மறக்கவும் வெறுக்குது
காதலைவெலப்போமோ நீ வா வா வா—இன்

ஸூ:—நட ! பேஷ்! வெகு நன்றாயிருக்கின்றது. சபையின் விநோ தத்தினலேற்பட்ட ஆனந்தசாகரத்தில் விளைந்த அமுதம்போ லல்லவா இருக்கின்றது. இன்று இச்சபையார் ஆநந்தபரிதர் களாயிருப்பார்கள் என்பதிற் சிறிதும் ஐயமில்லை.

நட:—ஐயா ! வந்தனம் உமது பிரிய வசனத்தால் மனமகிழ்ந்த னன். (நேபத்தியத்தை நோக்கிச் செவிசாய்த்து) கவனித்துக் கேளுங்கள்; பேரிகை முழக்கம் கேட்கின்றது.

ஸூ:— ஆம் ! ஆம் !! சம்பராசுர பிரபு கொலுவுக்கு வந்து விட்ட தை யறிவிக்கும் பேரிகையின் சத்தமல்லவா இது ?

நட:—ஆம் ! ஆம் !!

ஸூ:—நட ! இனித்தாமதிக்காதே; போவோம் வா.

[போகிறார்கள்.

பிரஸ்தாவனை

முற்றிற்று.

# முதல் அங்கம்

## முதற் காட்சி

இடம்:—சம்பர புரியில் சம்பராசுரன் கொலு மண்டபம்.
காலம்:—மாலை.
பாத்திரங்கள்:—சம்பராசுரன், தேனுகன், நாரதர், பிரமுகர்கள்.

சம்:—மந்திரி தேனுகா! நமது பிரஜைகள் சுகமாயிருக்கின்றனரா? நமது பகைவர்களாகிய தேவர்கள் தேவர்களுக்குச் சகாயம் செய்பவர்கள், தவம் புரியும் முனிவர்கள் இவர்கள் நமது இராஜ்யத்திற்குள் தலை காட்டக் கூடாதென்பதல்லவா நம தாக்ஞை? அது சரிவர நடந்து வருகிறதா?

தேனுகன்:—மகாராஜாவே! தமது ஆக்ஞை குறைவின்றிச் சரிவர நடந்து வருகின்றது.

சம்:—நல்லது, தேவர்கள், மனிதர்கள், இராக்கதர்கள் இவர்களுள் யாரேனும் நமக்குப் பகைவர் இருக்கின்றனரா?

தேனு:—மகாராஜாவே! ஒருவருமில்லை, தேவேந்திரன் நமது ஏவல் செய்யக் காத்துக் கொண்டிருக்கிறான். தலைவன் பாடு இக்கதியாயிருக்கும் பொழுது இனித்தேவருள் யார் நமக்கு விரோதிகளாகக் கிளப்புகிறவர்கள்? மனிதரைப்பற்றி நாம் சிறிதும் சிந்திக்கவேண்டாம். அவர்களால் நம்மை யாது செய்ய முடியும்? பிரபுவே! பகைவர் ஒருவருமில்லை.

சம்:—நல்லது! மந்திரீ! உன்னைப் போன்ற மதிமந்திரியையுடைய இராஜாக்களின் ஆக்ஞை சரிவரநடப்பதில் தடையுண்டாமோ? சிறிதுந் தடை நேராது; இது நிச்சயம்.

தேனுகன்:—எல்லாம் சமுகத்திய ஆக்ஞா சக்கிர மகிமையே.

சம்:—(ஆகாசத்தை நோக்கி) மந்திரீ! கவனித்துக்கேள்; பரமசிவனைக்குறித்து யாரோ ஒருவர் வீணை கானம் செய்து கொண்டு தோத்தரிக்கும் தொனி கேட்கின்றது.

[நேபத்தியத்திற்குப்பின் வீணைகானத் தோடுபரமசிவத்தோத்திரம்.

தேனுகன்:—(ஆகாசத்தை நோக்கி) ஆம்! ஆம்! கேட்கின்றது.

பரமசிவனைத் தோத்திரம் செய்து கொண்டு
நாரதர் பிரவேசிக்கிறார்

ஆனந்தக்களிப்பு.

சங்கர சங்கர சம்பு சிவ
சங்கர சங்கர சங்கர சம்பு.

"ஆதியனாதியுமாகி எனக் கானந்தமாயறிவாய் நின்றிலங்குஞ்,
சோதி மவுனியாய்த் தோன்றி அவன் சொல்லாதவார்த்தையைச்
சொன்னாண்டிதோழி— சங்கர சங்கர சம்பு 1

சொன்னசொல் லேதென்றுசொல்வேன் என்னைச் சூதாய்த்
தனிக்கவேசும்மாவிருத்தி
முன்னிலை யேதுமில்லாதே சுக முற்றச்செய்தேயெனைப் பற்றிக்
கொண்டாண்டி—சங்கர சங்கா சம்பு 2

பற்றியபற்றறவுள்ளே தன்னைப்பற்றச்சொன்னான் பற்றிப் பார்த்த
விடத்தே,
பெற்றதை யேதென்றுசொல்வேன் சற்றும் பேசாதகாரியம் பேசி
னான் தோழி—சங்கரசங்கர சம்பு" 3

தேனு:—மகாராஜாவே! நாரதர் தான் சந்தேகமில்லை. ஜாக்கிரதை யாய் இருக்கவேண்டும். கோபங்கொண்டால் சபித்துவிடுவார்.

சம்:—(ஆசனத்தை விட்டெழுந்து) ஆம்! ஆம்! (நாரதர் அருகில் வந்து விட்டார்) முனிவர் பெருமானே! அடியேன் சம்பாசுரன் வந்தனம் செய்கின்றேன்.

[மந்திரி முதலானவர்களும்
வந்தனம் செய்கிறார்கள்.

நாரதர்:—கல்யாண்! கல்யாண்!!

தேனு:—இதோ இவ்வாசனத்தமர்ந்தருள்க.

[ஆசனத்தைக் காட்டுகிறான்

நா:—(ஆசனத்தமர்ந்து சம்பராசுரனைப் பார்த்துக் கையை அமர்த்தி) ஆசனத்தமர்க; நாராயண! நாராயண!

சம்:—(உட்கார்ந்து) முனிவர் பெருமானே! தாங்கள் எவ்விட மிருந்து வருகிறீர்கள்?

நா:—சம்பராசுர! உலகப் பற்றற்றுக் காஷாய முடுத்துத் திரியும் எம் போன்றவர்களுக்கு, வீடேது, வாசலேது, விடயந்தானேது? ஒன்றுமில்லை: இருந்த இடத்திலிருந்து மூவுலகங்களிலும் நடைபெற்றது நடைபெறுவது நடக்கப்போவது முதலியவைகளை ஞானதிருஷ்டியால் அறியும் வல்லமை எங்களுக்குண்டு. உலகமெங்கும் சஞ்சரிப்பதுதான் எங்களுக்கு வேலை.

ச:—சுவாமிகள்! இங்கு இன்று எழுந்தருளியதன் நோக்கம் யாதோ?

நா:—அசுரேசா! நான் ஆகாயமார்க்கமாக உனது அரண்மனை நேரே வருகையில், இப்பொழுது சற்று முன்பு இச்சபையின்கண் தேவர், மானுடர், இராக்கதர் இவர்களுள் நமக்குப் பகைவர் ஒருவருமில்லையென்று கூறிச் சம்பாஷித்தது என் செவியிற்பட்டது. உடனே இங்கு இவ்விதம் புகழ்ந்து பேசிக் கொள்வது யார் என்பதைப் பற்றிச் சிந்தித்து, நீயெனவறிந்து உனக்கு யாரேனும் பகைவர் இருக்கின்றனரா என்பதைப பற்றி எனது ஞானதிருஷ்டியால் பார்த்ததில் உனக்குப் பகைவன் ஒருவன் இருக்கிறான் என்பதை யறிந்து அதை அறிவிக்கும் பொருட்டு இப்பொழுது இங்குவந்தேன்.

ச:—(உடனே ஆசனத்தை விட்டெழுந்து) ஆ! ஆ! அஞ்சாத வீரன் அலகாய சூரன், அண்டத்தையும் புரட்டவல்ல சமர்த்தனுகிய எனக்கும் ஓர்பகைவனிருக்கின்றானு? வெகுவிந்தை! நல்லது!

[கோபக் குறியுடன் ஆசனத்தமர்கிறான்

தே:—(அரசனை நோக்கி) சினந்தணிக; முனிவர் கூறுவது ஒருக்காலும் பிழைபடாது. விசாரிப்போம் (முனிவரைப்பார்த்து முனிவர் பெருமானே! எமதிறைவனுக்குப் பகைவன் யாவன் மனிதனு? அல்லது அசுரனு?

நா:—(உள்ளுக்குள் நகைத்து) இப்போது மனிதனுகத்தான் பிறந்திருக்கின்றனன்.

ச:—(எழுந்து) சுவாமி! எனக்குப் பகைவனுயிருப்பவன் மனிதனென்று சொல்லுகிறீர்கள். (மந்திரியைப்பார்த்து) மந்திரீ! இதென்ன விந்தை! (முனிவரைப்பார்த்து) நல்லது அவன் எங்கிருக்கின்றான்?

நா:—அசுரேச! துவாரகா நாதனுகிய ஸ்ரீ கிருஷ்ணனை உனக்குத் தெரியுமல்லவா?

ச:—உம் (தலையை யசைத்து) ஆம்! ஆம்! தெரியும்; அவனு எனக்குப் பகைவன்; இடைச்சேரியில் வெண்ணெய் திருடி வயிறு வளர்க்கும் மடையனல்லவா அவன்?

நா:—(தனக்குள்) என்ன துள்ளு துள்ளுகிறான்! ஜகத் ரக்ஷகனுகிய அந்த பரமாத்மா எங்கே? இவன் எங்கே (வெளிப்படையாய்) வெண்ணெய் திருடியவனல்ல, உன் பகைவன், அந்தத் திருடனுடைய மகன் உன் பகைவன்.

[மந்திரி தேனுகன் மூக்கில் கைவைத்துக்கொண்டு நிற்கிறான்.

ச:—அந்தத் திருடனுக்கு மகனொருவனிருக்கின்றனு?

[மீசையை முறுக்கித் தலையையசைக்கிறான்.

இதுவரையில் நான்கேள்விப்பட்டதில்லை; அவன் பெயரென்ன வயதென்ன?

நா:—அந்தத் திருடனுக்கு ருக்மிணியின் வயிற்றில் ஓர் குழந்தை பிறந்திருக்கிறது. பிறந்து இன்னும் பத்து நாளாகவில்லை

ச:—அக்குழந்தையா என் மேற் பகை கொண்டிருக்கிறது. (புயத்தை நோக்கி) எனது பலமும், எனது வீரமும், எனது ஆண்மையும் நான் பெற்ற வரங்களும் எங்கு சென்றன. ஓடியாபோய் விட்டன? ஒருக்காலுமில்லை. (மார்பைத்தட்டி) இந்தக் கட்டை சுடுகாடு செல்லும் வரையில் அவைகள் என்னை விட்டு நீங்குமா? (முனிவரைப் பார்த்து) இந்தக்கணம் துவாரகை சென்று கிருஷ்ணன் முதலான ஒருவரையும் அறியாமல் அச்சிசுவை யெடுத்து வந்து கடலிலெறிந்து விட்டு ஜபகோலத்தோடு திரும்புகின்றேன். இவனுக்கா நான் பயந்த

வன்! அது குழந்தை யென்கிறீர்! வெட்கம்! (மீசையை முறுக்கிப் புயத்தைத் தட்டுகிறான்) ஐயா! முனிவரே! என்னிடம் கருணை கூர்ந்து என் பகைவனைக் காட்டியதற்குப் பல கோடி வந்தனம் செய்கின்றேன். (வந்தனம் செய்கின்றான்) தாங்கள் சஞ்சலப்படவேண்டாம். இனி ஒரு கணமும் தாமதியேன். இன்னும் ஏதேனும் விசேஷ முண்டா?

நா—வேறொன்றுமில்லை, இதைத்தான் தெரிவிக்கவந்தேன். இனி என்னாலாக வேண்டிய தொன்றுமில்லை. நான் போய் வருகிறேன்.

[மெள்ள எழுந்திருக்கிறார்]

ச—முனிவரே! இந்திரனுடைய வஜ்ராயுதத்திற்கும் பிளவுபடாத இந்த நெஞ்சம் இந்த மானுடப்பதருக்கா பயப்படும். ஒருக்காலுமில்லை, இதோ ஒரு நொடியில் என் பகையைக் களைந்துவிட்டுத் திரும்புகிறேன். ஐயா! போய்வரலாம்; வந்தனம் செய்கின்றேன்.

முனிவருக்கு வந்தனம் செய்து கோபத்துடன் எழுந்துசெல்கிறான். எல்லாரும் போகிறார்கள், நாரதரும் ஸ்தோத்திரம்செய்துகொண்டே போகிறார்,

# முதல் அங்கம்

## இரண்டாம் காட்சி

இடம்:—கொலுமண்டபம்

காலம்:—பகல்

பாத்திரங்கள்:—சம்பராசுரன், தேனுகன், பிரபுக்கள்,

சம்பராசுரன் மந்திரி பிரதானிகள்
புடைசூழ ஜயகோலத்தோடு
பிரவேசித்தல்.

---

வாழ்த்து

மன்ன வுன்றன் மகுடம் வாழ்க வாழ்க வுன்றன் மகிமையின்
வைய முள்ள நாளும் வாழ்க வாழ்க மேரு மாமலை
யன்ன புயமும் புயத்தின் வீறும் அமர ரஞ்சு மாண்மையும்
அகில லோகம் பரவு முன்றன் அரசும் வாழ்க வாழ்கவே.

ச:—சபையோர்களே! நான் இங்கிருந்து புறப்பட்டுப்போன மறுநாளே துவாரகைக்குச் சென்று இரவில் நடுநிசியில் எனது மாயாசக்தியால் ஒருவருக்குந் தெரியாமல் ருக்மிணியின் பிரசவ அறைக்குட் புகுந்து எனது பகைவனாகிய அச்சிசுவை யெடுத்துக்கொண்டு வந்து சமுத்திரத்திலெறிந்து விட்டேன். இனி நமக்கு இந்த மூவுலகத்திலும் பகைவனில்லை; நாரதர் மகா கருணையுடையவர்!

டயார்:—சபாஷ்! பகைவனுக்கு இடங்கொடுக்கலாகாது; நோய்க் கிடங் கொடுக்கின் எப்படிக் கடைசியில் அது பெருந் தீங்கை விளைக்குமோ அது போல் பகைவனும் தீங்கு செய்வான். பகைவன் தலைகாட்டுவதன் முன்பு தொலைப்பதே மேன்மை தரும்.

ச:—மந்தரீ!

விருத்தம்

பெரும்பகை களைந்து வெற்றி பெற்றதன் குறியா நாளை
இரும்புவி புகழும் வண்ணம் இந்நகர்க் குடிக ளிந்த
அரண்மனைப் பிரபுக்க ளும்மை யடுத்துளோ ரெவர்க்கு மன்னர்
விரும்புமெப் பொருளு மூனும் வெறுப்புற நல்கு வாயே.

இந்த ஜயத்தின் அறிகுறியாக நாளையே நமது நகரக் குடிகள், அரண்மனைப் பிரபுக்கள் முதலாக நம்மை யடுத்துள் ளோரெவர்க்கும் அவரவர் விரும்பும் பொருள்களை மனமுவப்பத் தந்து மதுமாம்சாதிகளுடன் திவ்ய போஜனமும் திருப்தி கரமாகச் செய்வித்து யாவர்க்கும் சந்தோஷமுண் டாக்குக.

மந்திரி;—

விருத்தம்

பெருமித வாழ்வு மேவப் பெரும்பகை களைந்த மன்னா!
கருதிய வண்ணம் நாளைக் காலையே முடிப்ப னின்று
ஒருமொழி நினைக்குரைப்ப துசிதமென் றெண்ணு கின்றேன்.
தருதியேல் விடைநீ யானும் சாற்றுவேன் சாற்று வேனே

பெரும்பகையைத்தொலைத்து ஜயகோலத்தோடு வந்த மன்னா! தாங்கள் கருதியவண்ணம் நாளைக் காலையிலேயேமுடிக் கிறேன்; அடியேன் இன்று தங்களிடம் ஒரு வசனம்கூற நினைத் திருக்கிறேன். உத்தரவானால் தெரிவிக்கிறேன்.

ச:—

விருத்தம்

மதியினிற் பெரியோ யுன்றன் மாற்றமும் மறுப்ப தாமோ?
இதமது வாகு மல்லா லெனக்கிடை யூற தாமோ
எதுவது வாயி னுந்தா னியம்புவா யியம்பு வாய்நீ
முதிரமு தளிப்பி னெந்த மூடரே மறுப்பர் கூறுப்?

மகாபுத்திசாலியாகிய மந்திரி நீ சொல்லும் மொழி என்னுல் மறுக்கக்கூடியதாகுமோ? இராது. எப்போதும் எனக்கு இதந் தருவதாகவேயிருக்குமே யல்லது இடையூறுண்டாக்கத் தக்கதா யிராது. ஆகையால் அது எதுவாயினுஞ்சரி, சீக்கிரஞ் தெரிவிப் பாய்.

மந்திரி:—மகாராஜாவே: (மன்னனைநோக்கிக்கையைநீட்டிக் கொண்டு)

அகவல்

அதிபலவீரா! அசுரர்கள் தீரா!
இதமது சொலவே யான்மன மூவந்தேன்.
இப்பெரும் வெற்றிக் கிசைந்ததா மதுவே
செப்பு வனைய சிலநா ளாகப்
போற்றி வளர்த்திடும் பொன்னிக ரணங்கை
மாற்றிலாப் பசும்பொன் மேனிமா தரசை
இரதிநிக ரெழிலை இணையிலா மயிலை.
கருவிழிக் குயிலைக் கனங்குழை யாளை
தேயா மதியிற் சிறந்தொளிர் வதன
மாயா வதியை மணப்பதற் கிதுவே
சமயம் சமயம் சமய மிதுவே
சமயம் இதுவே மன்னா!

மன்னா தாங்கள் சிறையெடுத்து வந்து சிலநாளாக வளர்த்து வரும் மாயாவதி யென்னும் பெண்மணியை மணப்பதற்கு இது சமயம் ஆகையால், தாங்கள் அந்த ஸ்திரீரத்னத்தை மணந்து, இந்த ஜயத்தில் எங்கள் யாருக்கும் என்று மடையாத மகிழ்ச்சியைத் தந்தது போல், தாங்களும் மகிழ்ந்து சுகம் பெறவேண்டும். அதற்கு இதுவே சமயம்.

ச:— பேஷ்! மந்திரி! பேஷ்! நன்கு தெரிவித்தனை! மந்திரீ! நீ யெண்ணியது போலவே யானும் சற்று முந்தி எண்ணினேன். அவ்வாறே நீயும் அறிவித்தாய். சோதிடமறிந்தவன் போற் கூறினாய்; உன் மதியேமதி. மிகச் சந்தோஷம் (ஆசனத்தமர்ந்து) நீ கூறிய படி செய்வதில் யாதுந்தடையில்லை. நாளயதினம் சாயந்திரம் நான்

மாயாவதியின் சம்மதத்தைப்பெற அவளிருக்கும் மாளிகை செல்ல நிச்சயித்திருக்கிறேன். நீஇன்றே தூதிகள் மூலமாக அரசன் உன்னை மணக்கநிச்சயித்திருக்கிறர்; நாளை உன் சம்மதம்பெற வருவார்' என்று தெரிவித்துவிடு; சம்மதமின்றி மணப்பது தகுதியல்ல.

மந்திரி:—மகாராஜாவே! அவ்விதமே சொல்லியனுப்புகிறேன். சம்மதம் பெறவேண்டுவது நியாயமே. இராவணன் சீதையின் சம்மதம் பெறவிருப்பித் தானே வெகுநாள் காத்திருந்தான்.

சம்:—ஆம் ! ஆம் !! அதுசரி; இப்பொழுது நேரமாயிற்று. நான் கூறியபடி யாவும்நடைபெறட்டும். நான்வெளியே உலாத்தப் போகவேண்டும். போகிறேன்

[போகிறன்
சபைகலைகிறது

## முதல் அங்கம்

### மூன்ருங் காட்சி

இடம்:—உத்தியானவனம்

காலம்:—வெயின் மாலை

பாத்திரங்கள்:—

சம்பராசுரனும் வஜ்ரதம்ஷ்டரனும்
உத்தியாவனத்தின் கண் உலாவி

வருகிருர்கள்.

ச:—நண்ப ! இன்று வனத்தின் வளப்பத்தைக்கண்ணுற்றனையா? மனதுக்கும் கண்ணுக்கும் பேரானந்தமளிக்கின்றது. இந்த அந்தி வெயில் படுந்திருப்பதை நோக்கின் சொர்ணச் செடிகள் சொர்ணத்தளிர்கள் விட்டிருப்பது போலல்லவா காண்கிறது. (நடந்துகொண்டே) இதோ இம்மாமரங்களைப்பார்! எவ்வளவு அழகாய்த் துளிர்த்திருக்கின்றன. இம்மகிழ மரங்களைக் கவனித்தனையா ? எவ்வளவு நேர்த்தியாய்ப் புஷ்பித்திருக்கின்றன. ஆ! ஆ! என்ன அதிசயம் ! இவைகளிலிருந்து மலர்கள் உதிர்ந்திருப்பதைக் கண்ணுறின் பூமிதேவியை இம்

மரங்கள் அர்ச்சித்திருப்பது போலல்லவா காண்கின்றது? [நடந்துகொண்டே] வரிசையாக விருக்கும் புன்னாக மரங்களை யும் அவைகளினருகே அடர்ந்து படர்ந்து துளிர்விட்டு மொட்டுகள் அரும்பிக் கண்ணுக்கினிமையாக விளங்கும் மல்லிகைச் செடிகளையும் பார். இவைகளை எப்படி உவமிக் கின்றாய் நீ?

வஜ்:—பிரபுவே! நல்ல கேள்வி கேட்டீர்கள். இப் புன்னாக மர ங்களைப் புருஷ யானைக்கும் இவைகளிலிருந்து நீண்டு வளர் ந்து தொங்கும் துளிர்கள் நிறைந்த கிளைகளைத் துதிக்கைக ளாகவுங் கூறலாம். அருகே அழகுபெற விளங்கும் மல் லிகைச் செடிகளை பெண் யானைகளாகவும் அரும்புகளை அப்பெண் யானைகளின் ஸ்தனங்களாகவும் கூறலாம். இது வன்றிப் புன்னாக மரங்களின் கிளைகள் வளைந்து மல்லிகை அரும்புகளின் மேற்படிந்திருப்பதைப் புன்னாக மரங்களாகிய புருஷ யானைகள் கிளைகளாகிய தங்கள் துதிக்கைகளால், மல் லிகை யரும்புகளாகிய பெண் யானைகளின் ஸ்தனங்களைத் தீண்டுவ தெனவும் கூறலாகும்.

ச:—(சிரிக்கிறான்) நண்ப! நன்கு வர்ணித்தனை? யானும் அவ்வித மே கருதினேன். இத்தென்னை மரங்களையும் பேரீச்ச மரங்க ளையும் கவனித்தனையா?

வஜ்:—ஆகாயத்தில் குடை பிடிப்பனபோற் காண்கின்றன.

ச:—இக்கமுக மரங்களோ?

வஜ்:—ஆகாய மாகிய பந்தலுக்கு வஜ்ரக்கால் நாட்டியது போல் விளங்குகின்றன.

ச:—நண்ப! நன்றாகக் கூறுகிறாய்? பேஷ்! காற்றுச் சுகமாக வீசு கின்றது. இதோ இங்கிருக்கும் மண்டபத்துக்குச் சென்று அங்கு சற்று உட்காருவோம் வா!

வஜ்:—அப்படியே!

கொஞ்ச தூரம் சென்று மண்டபத் தில் உட்காருகிறார்கள்.

ச:—நண்ப! தென்றலின் சுகத்தை நுகர்ந்தனையா? என்ன இன்பம்! என்ன சுகம்! என்ன குளிர்ச்சி! பாதிரி, சண்பகம், மல்லிகை, மகிழ் முதலிய மலர்களிற் படிந்து கமகமவென வாசனையைத் திரட்டிக் கொண்டுவந் துலாவுகின்றதன்றோ?

வ:—மன்னு! இன்னொரு அதிசயம்! இப்படிச் சுகமாக மந்தமாருதம் வந்துலாவுவதற் கேற்ப இதோ இக்கட்டு மாமரத்தின் கிளைகளில் தத்தம் துணையோடு உட்கார்ந்து தளிர்களைக் கோதிக்கொண்டும் இனிமையாகப் பாடிக்கொண்டுமிருக்கும், குயில், கிளி, நாகணவாய் முதலிய பறவைகளைப் பாருங்கள். மனதுக்கு என்ன இன்பம் தருகின்றன.

ச:—எந்த மாமரம் நண்ப! இதோ இங்கிருக்கின்றதே. இங்கேயா [பார்க்கிருன்.

ஆம் நண்ப! (மௌனம்) என் மனம் மாறிவிட்டது; புத்தி வேறிடம் சென்று விட்டது. சற்று முன் இன்பமாயிருந்த இத்தென்றல் இப்பொழுது துன்ப மளிக்கும் அனலாய் வீசுகின்றது. இப்பறவைகளின் பாட்டு என் மனதை உருக்குகின்றது. மன்மதன் பஞ்ச பாணங்களாலும் என்னை வருத்துகிருன் நண்ப! இவனை வெல்வதரிது! என் வீரதீரங்கள் இம்மன்மதனிடம் நிற்கா! மாயாவதியின் மலர்முகம் கண்டாலன்றி என் உயிர் தரியாது.

சோகமுறுகிருன்,

வ:—(தனக்குள்) இத்தென்றலின் சுகத்தையும் பக்ஷிகள் தத்தம் துணையொடு கூடிப் பாடுவதையும் பார்த்ததும் மன்னன் மன்மதன் வசமாகி மாயாவதியை மனதிலெண்ணி விட்டான். காமிகள் தாங்கள் காமித்தவர்களையடைந்தாலன்றித் தங்கள் சுய நிலைமையையடைவதரிது. ஆகையால்மாயாவதியை இங்கு தருவிப்போம். [வெளிப்படையாய்] இதோ இக்ஷணம் இங்கு மாயாவதியைத் தருவிக்கிறேன்.

மாயாவதியின் மாளிகையிலிருக்கும் குந்தாதிகளின் தலைவி ஒரு பக்கமாக வருகின்ருள்.

ச:—(கண் விழித்து) மாயாவதி வருகின்றனளா?

வஜ்;—இல்லை, வரவழைக்கிறேன் என்பதாகத் தெரிவித்தேன்,

ச:—அதோ! யார் வருகிறது?

வ—(அப்பக்கம் நோக்கி) யாரோ ஒரு பெண் பிள்ளை.

ச:—யார் அது?

வ:—அருகில் வரட்டும் பார்ப்போம் (உற்றுப் பார்த்து) மாயாவதியின் தாதிகளுக்குத் தலைவி சுமதி.

சுமதி பிரவேசிக்கிறாள்,

சுமதி:—மன்ன! வந்தனஞ் செய்கின்றேன்,

[வந்தனம் செய்கிறாள்.

ச:—நற்குண முடைய நங்காய்! என்னை மன்மதனுடைய பூங்கணைக்கு இலக்காகும்படி செய்த அதி சுந்தர ரூபவதியாகிய மாயாவதி சுகமாயிருக்கின்றனளா?

சுமதி:—ஐயனே! சுகமேயிருக்கின்றனள்

ச:—இப்போது என் செய்கின்றனள். என் கருத்தைத் தெரிவித்தனையா?

சுமதி:—

விருத்தம்.

ஐயநின் மனக் கருத்தை யறைந்தன மன்று தொட்டுச்
செய்யவா யமுதத் தீஞ்சொல் திருவனாள் முகமு மெய்யும்
வெய்ய தீப்பட்ட பூவில் மெலிந்து சோர்ந்தன வீதன்றி
மையணி விழியினாளும் மறுத்தனள் உணவுந் தானே

ஐயா! தங்கள் மனக்கருத்தைத் தெரிவித்தோம். அதைச் செவியுற்றதும் அப்பெண்ணரசியின் முகமும் மெய்யும் தீயிற் பட்ட பூவிற்கொப்ப மிகவும் மெலிந்து வாடிப்போயின. இதுவன்றி ஆகாரம் உண்ணவும் மறுத்து விட்டாள். எப்போதும் அழுதுகொண்டேயிருக்கின்றனள்.

ச:—நங்காய்! என் ஆவிக்கினிய அன்னப் பெடையாதன் முகமும் மெய்யும் வாடியிருக்கின்றனள். இது உண்மையா? ஆகார முண்ணவும் மறுத்தனளா? (பெருமூச்செறிகிறான்) என் என்

என்னை மணந்து கொள்வதில் அவளுக்குத் தடையாதோ? கூறுவது உண்மையாகத் தோன்றவில்லை;

சினமடைந்து ஆசனத்தைவிட்டெ ழுகிறான். தாதி நடுங்கித் தூரவில குகின்றாள்.

ஈரடிஅராகம்

மடமயி விடருறும் படியவ ணடந்ததென்?
அடியை!யிக்கணமதை யறைகுதி யிலையெனின்
உனதுயி ரொழிவது முறுதியென் றறிகுதி
எனதுயிர் துயருற விசையுமென் மனமரோ.

அடியே! அந்த மடமயில் இவ்விதம் துயருறும்படி நடந்ததென்ன? சீக்கிரம் ஒளியாமல் தெரிவி; இல்லையேல் உன்னுயிர் போய்விடும், இதனையுறுதியென நம்பு; எனது இன்னுயிர் துயருற என் மனமிசையுமா?

(இருகைகளையும் கூப்பிக் கொண்டு)

அகவல்

மன்னா சரணம்! மகிபா சரணம்!!
தன்னே ரில்லாத் தலைவா சரணம்
முனியே லெம்மை முனியே லெம்மைக்
கனிமொழி யாளைக் கண்ணிமை போலக்
காத்திடு மெம்மேற் கடுமொழி பகரேல்
சீர்த்தியிற் பெரிய தீரா யாங்கள்
மன்றலம் பூங்குழன் மாயா வதிக்கு
நின்றன் கருத்தை நியாயமொ டுரைத்தோம்,
செவிமாந் தியதும் சிவசிவ வெனத்தன்
குவிகரங் கொண்டு குழையணி செவியைப்
பொத்தினள் சற்றுப் பொறுத்தனள் பின்பு
மெத்தவும் நொந்து விம்மி யரற்றி
மானுட ரீன்ற மடப்பிடி தன்னை
ஈன வசுரன் மணப்பது மென்னே!
என்னே! என்னே!! ஈதென் விதியோ
என்னவிந் நியாயம் கூறியே யேங்கி

ஊனு முறக்கமு மொழித்தனள் மன்னு!
காணுதி நீயே கனங்குழை கோலம்!

ச:—சண்கள் (சிவக்கத்தாதியை நோக்கி) ஆ! மாயாவதி என்னை மணந்து கொள்ளச் சம்மதிக்காமலா இங்ஙனம் வருந்துகின்றனள். இது உண்மைபோலும்! நன்று! நன்று!!

சு:—ஆம்! மகா பிரபுவே!

ச.—சரி! சீக்கிரமாக மாளிகை சென்று மாயாவதிக்கு நான் வருவதை இப்பொழுது தெரிவித்து மாளிகையின் பின்புறத்து உபவனத்திலுள்ள மண்டபத்திற்கழைத்து வா; இதோ நான் கூடவே வருகிறேன்.

சு:—இதோ! ஓடித்தெரிவித்து உத்தரவுப்படி செய்கிறேன்.

[போகிறான்.

ச:—(நாற்காலியில் சாய்ந்தவண்ணத்தில் வஜ்ரதப்ஷ்டரனை நோக்கி) நண்ப! என்னால் முடியாத காரியம் யாது? எனக்குக்கிட்டாததும் உலகத்தொன்றுளதா? தேவர்கள் மூவராலும்பெறுதற்கரிய தொன்றிருப்பின், அதையுமன்றோ ஓர் நொடிப்பொழுதில், பெறத்தச்க மாயா சக்தி என்னிடத்துள்ளது. இப்படிப்பட்ட என்னை மணக்க மாயாவதி மறுத்தனளென்று தாதி கூறுகின்றனளே! என்னே ஆச்சரியமிது? இதற்குத்தானு நான் சிறையெடுத்து வந்து இது நாள் வரையில் வளர்த்து வந்தது? உண்மையில் என்னை மாயாவதி மறுத்திருப்பளா? நண்ப! உன் மனதில் தோன்றுவதென்ன ?

வ:—ஒருக்காலும் மறுத்திருக்க மாட்டாள் மன்னு! எல்லாவற்றிற்கும் நேரிற் கண்டு உள்ளக்கருத்தறிவது நன்மை.

ச:—ஆம்! யானும் அவ்விதமெண்ணித்தான் தாதியிடம் சொல்லியனுப்பினதும். ஆகையால் நான் போகிறேன். நீயும் அரண்மனை செல், நேரமாயிற்று. போகிறார்கள்.

முதலங்கம்
முற்றிற்று.

---

## இரண்டாவது அங்கம்

### முதற்காட்சி

---

இடம்:—:சம்பாபுரியில் ஓர் மாளிகை.

காலம்:—இரவு.

பாத்திரங்கள்:—தாதிகள், தலைவி சுமதி, மாயாவதி,

தாயதியர்கள்சூழமஞ்சத்தில் சயனித்து
நித்திரை செய்த மாயாவதி நடுநிசியில்
விழித்துக் கொண்டு வருந்துகிறுள்.

மாயாவதி:—ஆ! ஆ!! நான் இப்பொழுது ஏன் விழித்துக்கொண்டேன். இவர்களைப்போல் நித்திரையிலேயே இருக்கலாகாதா? எனக்கு மட்டுமோ விழிப்பு வரவேண்டும். நான் தானு பாவி! ஜகதீசா! நானேன் இவ்விதம் துன்புறவேண்டும். உயிரைக் கொண்டு போக எம தர்ம ராஜனுக்கு உத்தரவிடலாகாதா? மானுடஜன்ம மெடுத்த நான் காடு, மலை, வனம், வனாந்தரம் முதலிய விடங்களில் திரியும் கொடிய விலங்கினும் குரூரகுண முடைய இந்த அசுரர்கள் கையிலா அகப்பட்டுத் தவிக்க வேண்டும்? புலியிடத் தகப்படினும் இறந்து சுகம் பெறுவேனே? ஜகதீசா! அவரவர் செய்த பாவபுண்ணியங்களுக்குத்தக்கபடி சுகாசுகங்கள் ஏற்படுவது நியாயமாயினும் என் பாவத்திற்கு இதைத் தவிர வேறு தண்டனை விதித்திருக்கலாகாதா? இது வரையில் தன் வயிற்றுப் பெண்ணைப்போல் வளர்த்து வந்த பாவி என்னை இப்பொழுது பெண்டாள எண்ணங்கொண்டிருப்பதாகத் தெரிவித்திருக்கிறனே. ஐயோ! இந்த விதிக்கா நானுளாகவேண்டும்? ஆ! இச்செய்தி கேட்ட சாயந்திர முதல் என் வயிறு எரிகிறதே. ஐயோ! திடீரென்று தலையில் கல் போட்டானே பாவி! தாய் தந்தையரைப் பிரிந்து இதுவரையில் இந்த அசுரப் பாவியிடம் வளர்ந்து வந்தது

கூடக் கஷ்டமாகத்தோன்றவில்லையே! இப்படிப்பட்ட கெட்ட எண்ணங்கொண்டு வளர்க்கிறானென்பதை நானறியேனே! அறிந்திருந்தால் உயிரை மாய்த்துக் கொள்ள வழிதேடியிருப்பேனே! ஜகதீசா! இந்தச் சமயம் நீயல்லாமல் கருணைபுரிபவர் யாவர்? (தாதிகளைக்காட்டி) இதுவரையில் என் இன்னுயிர்த் தோழிகள் போலவும் சகோதரிகள் போலவு மிருந்த இவர்களுமல்லவாகொடிய பாவி சம்பராசுரன் கருத்துக்கிணங்குப்படி பேசத் தலைப்பட்டு விட்டார்கள். அம்மம்மா! பார்க்கப் பயங்கரமும் கோரரூபமும் செம்பட்டை மயிருமுடையபாவியை என்போன்றமானுடமாதுமணந்து கொள்ள மனந்துணிவாளோ! அந்தோ! பூனையிடத் தகப்பட்ட பூங்கிளி போலல்லவா என்கதி முடிந்தது. அந்தப் பாவியின் முகத்தை நினைப்பினும் நெஞ்சம் பதைக்கின்றதே. ஒரு நாழிகை ஒரு யுகமாகவல்லவா காண்கிறது. எந்தஉபாயத்தால் இவனிடமிருந்து நான் தப்புவேன். ஆ! என்ன இவ்விதம் நினைக்கிறேன். பாம்பின் வாய்ப்பட்ட தேரை, தான் தப்ப வழிதேடியதற் கொப்பாகவல்லவா இருக்கின்றது. பார்த்தால் நமது முயற்சியில் நாம் தப்ப வழியில்லை. அகில புவன கர்த்தாவாகியஜகதீசன்திருவருளாலன்றித்தப்பவழியைக்காணேம்அவர் கருணையை நான் பெறுதல் கூடுமோ? துச்சாதனன் துகிலுரியும் போது திரௌபதிக்கு இரங்கிய தீனதயாளனல்லவா பகவான்! அவர் இப்பொழுது எங்குற்றார்? நம்மை மட்டும் கைவிட்டு விடுவாரா? மனதே! நீ வருந்த வேண்டாம். (மெளனம்) சீ! நான் என்ன எண்ணம் எண்ணுகிறேன். பிறவிக் குருட னொருவன் உலக வனப்பைக் காணும் பாக்கியம் நமக்குக் கிடைக்குமோ வென்று நினைப்பது போலல்லவாஇருக்கின்றது. திரௌபதி எங்கே! நானெங்கே! அவள் மகா உத்தமி, புண்ணியவதி, பதிவிரதா சிரோமணி. அந்த ஸ்திரீ ரத்தினத்திற்குப் பகவான் கருணை புரிந்தாரெனில் எனக்குமித்தருணம் கருணை புரிவாரென்பதை நான் நம்புவதெப்படி? நான் அத்தகைய பாக்கியம் பெறத்தக்க புண்ணியவதியா

யின் இந்தக் கொடும் பாவியிடம் அகப்பட்டுத் தீவாய்ப்புழு வாய்த்துடிப்பேனு? மகா பாவிக்கு மகானு பாவனது கருணை எங்கிருந்து கிடைக்கும்? அந்தோ; கிட்டுவதரிது, இனி நாம் என் செய்வது? அவரை நம்புவதிற் பயனில்லை. பின் யாரைத்தான் நம்புவது? யார்தான் என்னை யீடேற்றுவார்? நினைக்கின் அவரை யன்றி யார்? சிக்ஷிப்பவரும் ரக்ஷிப்பவரும் அவர் ஒருவரேயல்லவா? நடக்கிறபடி நடக்கட்டும்; அந்தப் பரமாத்மாவின் திருவடியையே சரணமாக அடைகிறேன். அவர் எவ்வழி விடினும் சரி.

[தன்னை மறந்து பகவானை நினைத்துப் பாடுகிறுள்.

இராகம் காம்போதி

(1) அன்னையும் தந்தையுமாகிச் சகமருள் ஈசனே—அன்பர்
ஆணவபாச மொழித்துப் புரந்தருள் ஈசனே
(2) முற்றத்துறந்த முனிவரகத் தொளிர் ஈசனே—ஓதும்
முத்தொழி லும்புரிமூவருமாகிய—ஈசனே
(3) அற்புதப் பேரின்ப முத்தி நலந்தரும்—ஈசனே—உனக்
கன்பு செய்யாப் பெரும் பாதகி யானேனே—ஈசனே
(4) மானுட ரீன்ற மடமயில் நானன்றோ- ஈசனே—கொடும்
வஞ்சக நெஞ்ச வசுரனை மணக்கவோ—ஈசனே

இப்பொழுது மாயாவதி உரத்த குரலோடுபாடுகிறுள். இதனல் நித்திரை செய்த தாதிகள் விழித்துக்கொள்கிறுர்கள்

தாதிகள்:—எழுந்து மாயாவதியை நோக்கிக் கையை நீட்டிக் கொண்டு) மாயாவதி! ஏன் அழுகிறுய்? உனக்கு யாதுற்றது? சீக்கிரந் தெரிவி.

மாயாவதிக்கு இவர்கள் பேச்சு செவியிற் படவில்லை, பாடிக் கொண்டேயிருக்கிறுள்.

(5) யார்செய்த பாபமோ யாரிட்ட சாபமோ ஈசனே-இந்த
அவனியிலே பிறந்தவதிப்படலானேன்—ஈசனே

(6) சொல்லுந்தா மல்ல வல்லற்படுவது ஈசனே—இதைச்
சொல்லவோ நின் சித்த மறிந்தது மல்லவோ—ஈசனே

தாதிகள் மூக்கின் நுனியில் கைவைத்து
இதென்ன இதென்ன என்கிருர்கள்.

(7) என்னையஞ்சேலென்பா ருன்னையல்லாவில்லை-ஈசனே—இந்தச்
சின்னச் சிறியேனைக்கைவிடல் நீதியோ—ஈசனே

(8) ஆவியுடல் பொருள் யாவு முன்னடைக்கலம்—ஈசனே—இந்த
அநாதைபை யாதரித் தாள்வதுன் பாரமே-ஈசனே

(களைத்து மஞ்சத்தில் விழுகிருள்)

தாதியர்:--(குழுமி நின்று) ஓகோ! நீ எங்கள் மன்னனை மணந்து கொள்வதற்கா வருத்தப்படுகின்ருய்? இனி இவ்விதம் கூச்ச விடுவாயாகில் மன்னனுக்கு இச்செய்திபைத் தெரிவித்து உனக்குத் தகுந்த சிக்ஷை செய்து வைப்போம். நீவீணே வருந்துகின்ருப்; வீரதீர பராக்கிரம சாலியான சம்பராசுர பிரபுவை மணந்து கொள்வதில் உனக்குத்தடையாதோ? மணந்து சுகமாயிரு; உன்னை மணந்து கொள்ளக் கருதியே சிறையெடுத்து வந்து கன்னிப்பருவம் கழியும் இக்காலம் வரை தன்னுயிரினும் சிறந்ததாகக் கருதி வளர்த்து வந்தனர். இதனை நீயறிவாய், அவரது சித்தத்துக்கு மாறுபடாதே, ஒத்து நட.

மாயாவதி களைதெளிந்து எழுந்து
கண் விழித்துத் தன் முன் நிற்கும்
தாதியர்களைப்பார்க்கிருள்.

மாயாவதி;—(தனக்குள்) ஆ! ஆ! சற்று முன் நான் எழுந்து என் விதியை நினைத்து விசனமுற்றேனே. அப்பொழுது விழித்துக் கொண்டவர்கள் போலல்லவாகாண்கிருர்கள். (உடல் சிலிர்க்கிருள்)கோபத்தீ இவர்கள் எல்லாருடைய முகத்திலும் ஜொலிக்கின்றதே. என்ன எண்ணமோ தெரியவில்லையே. கொன்று விடுவார்களாயின் நான் புண்ணியம் செய்தவளாவேன்.

கையை மஞ்சத்தில் ஊன்றிக்கொண்டு
தலைவிரிகோலமாய்த் தலையைச் சாய்த்
துக்கொண்டுஉட்கார்ந்திருக்கிருள். கண்
களில் நீர் தாரை தரையாகப் பெருகி
ஓடுகிறது.

விருத்தம்

சு:—

மயிலியல் மாதே யோதும் மதிதனை யுவந்து கேணீ
தைரிய வீர தீரன் சம்பரா சுரனெங்கோமான்
புயமலை தழுவி வாழப் புண்ணியஞ் செய்தாய் நீயுன்
மயலினை யொழித்து எந்தம் மன்னனை மணக்க நேர்வாய்

மயிலைப் போன்ற சாயலையுடைய மாதரசே! யான் உன க்குக் கூறும் புத்திமதியைக்கேள்; தைரியவீரதீரனாகிய சம்ப ராசுரனுடைய மலைபோன்ற புயத்தைத் தழுவ நீ புண்ணி யஞ் செய்திருக்கவேண்டும். ஆகையால் நீ உன் உள்ளத்தில் கொண்டிருக்கும் மயலை யொழித்து நமது மன்னனை மண ந்து கொள்ள உடன்பட்டுச் சுகமாக வாழ்ந்திரு; வீணில் மன்னனுடைய எண்ணத்துக்கு மாறாக நினைத்துக் கெட்டுப் போகாதே.

மாயாவதி:—(தலை நிமிர்ந்து பெருமூச்செறிகிறாள்)

விருத்தம்.

மாதர்கா ணீவிர் கூறும் மதிதனை யெவரே கொள்வார்
தீதிலா மாந்த ரீன்ற தெரிவையிவ் வேழை யன்றோ
நீதியோ மனித மாதை நிசிசரர் மணப்ப திந்தான்
ஈதென்றன் விதியோ வையோ! ஈசனு மூவக்குங் கொல்லோ

மாதர்களே! நீங்கள் கூறும் புத்தி மதியை நல்லதென்று ஏற்றுக் கொள்வார் யாராவர். தீதென்பதறியாத மானுட ரீன்ற மடந்தை நானல்லவா? மானுட மாதை அசுரனொருவன் மணப்பது நீதியாமோ? ஐயோ! இதுவும் என் தலைவிதியா? எங்கும் நிறைந்து விளங்கா நின்ற பரமகருணா நிதியாகிய ஈசனுக்கு இது ஏற்குமோ? நீவர் கூறுவதென்னே. உங்கள் மனதில் இரக்க மென்பதில்லை போற் காண்கிறதே. என்னை யேன் வீணாக வதைக்கின்றீர்கள். அந்தோ! இப்பொழுதே இந்த க்ஷணமே எனக்கு மரணம் நேரிடின் நான் புண்ணியத் தைச் செய்தவளாவேன்.

கண்ணீர் பெருகக் கதறுகிறாள்.

தாதிகள்:—(மாயாவதியைப்பார்த்து)

## ஆனந்தக்களிப்பு.

இராகம்-நாதநாமக்கிரியை.

### பல்லவி.

நீயோ நீதியைக்கண்டாய்—உனது
நீதியும் நியாயமு மிங்கு செல்லாது (நீயோ)

### சரணங்கள்

மானுடர் நீதிகள் வேறு—எங்கள்
மரபினர் கொண்டிடும் நீதிகள் வேறு
மானுடர் வானவர் யார்க்கும்—என்றும்
வாதனை செய்வதே எங்களினீதி (நீயோ)

வதன மதியழகுக்கும்—உன்றன்
வம்பிட்ட கொங்கைக் குடமிரண்டுக்கும்
நிதமன முருகிடும் வீரன்—பாரும்
நிகரிலாத் தீரனின் நீதி கொள்வாரோ (நீயோ)

எங்கள் மொழி மனங்கொண்டு—மனத்
தெண்ணும் வீணெண்ண மொழித்துப்புருட
சிங்கமா மெங்களிறைவன்—கொண்ட
சித்தக் கருத்தினை யொத்து மணப்பாய் (நீயோ

மாயாவதி:—(கண்களினின்றுநீர் பெருக மஞ்சத்தின் மீதுட்கார்ந்த வண்ணத்தில்)

### விருத்தம்.

மங்கை மீருங்கணீதி வனத்திடை திரிந்துலாவும்
வெங்கொடு மிருக மேனு மேற்கொளுந் தரத்த தாமோ
தங்குமே ரெழின் மானொன்றைத் தாவுவெம் புலிமணப்ப
தெங்ஙனே பொருந்தும் நீவிரியம்புவீ ரியம்புவீரோ

மங்கைகாள்! உங்களுடைய நீதி இவ்வனத்தின் கண் திரிந்துலாவும் கொடிய மிருகமும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாமோ? மிகவும் அழகான ஓர் மானை ஓர் புலி மணந்து கொள்வதெனில், அது எவ்விதம் பொருந்தும்? நீங்கள் யோசித்துக் கூறுங்கள். அம்மம்ம! இது என்ன அனியாயம்.

[மூர்ச்சித்துப்படுக்கிறாள்.

சு:—(மற்றவர்களை நோக்கி) தோழிகாள்! பார்த்தீர்களா! இவளுடைய எண்ணத்தை? நமது மன்னனது எண்ணத்திற்கு முற்று மாறாக வல்லவா விருக்கிறது. நாம் நயத்திலும் கூறினோம் பயத்திலும் கூறினோம். ஒன்றுக்கும் இவள் வசப்பட்டு வாவில்லை. அந்தோ! இவளது திருமேனியை நோக்கினவன் உலகத்தை வெறுத்த தவசியேயாயினும் மணந்து சுகமனுபவிக்க மனங்கொள்ளாமலிருப்பானோ? நம் போன்ற பெண்களுக்கு மன்றோ இப்பெண் மேல் ஆசையுண்டாகின்றது. மன்னனோ இவளை மணந்து கொள்ளாவிடில் உயிர் துறந்து விடுவான் போற் காண்கிறான். சதா காலமும் தன் சிந்தையை இவளிடமே நிறுத்தியிருக்கிறான். இக்கட்டழகியை இவ்வளவு நாள் வளர்த்து வந்து இப்பொழுது இவள் இணங்காவிடில் விட்டுவிடுவானோ? எண்ணியபடி எக்காரியமும் முடிக்கவல்லவனன்றோ நமது சம்பராசுர பிரபு. இவள் மனமொத்து மணந்து கொண்டால் மணம் பெறுவாள். இல்லாவிட்டால் என்ன சம்பவிக்குமோ இவ்வேழைக்கு அறியேன். இன்று சாயந்திரமே வருவதாகத் தெரிவித்தவர் எக்காரணத்தாலோ வரவில்லை, நாளைக்கு அவசியம் வருவாரென்பது நிச்சயம். வந்து நம்மை யேதேனும் கேட்பாராகில் நடந்ததைக் கூறிவிட வேண்டியதுதான். நாமென்ன செய்யக்கூடும்.

[இவ்விதம் பேசிப் படுத்துப்
பழையபடி எல்லோரும் நித்
திரைபோய் விட்டார்கள்.

---

## இரண்டாவது அங்கம்
### இரண்டாவது காட்சி

---

இடம்:—சம்பராசுரனது மாளிகையின் ஓர் அறை

காலம்.—பகல்

பாத்திரங்கள்.—சம்பராசுரன்–வஜ்ரதம்ஷ்ட்ரன், பிங்களகேசி.

சம்பராசுரன் ஓர் ஆசனத்தில் வீற்றிருக்கிறான். அருகே பிங்களகேசி நின்று கொண் டிருக்கிறாள்

சேவகனொருவன் வருகிறான்.

சே:—மன்னா! வந்தனம், தமது நண்பர் வந்திருக்கின்றார். தெரிவிக்க ஆக்ஞாபித்தார்.

ச:—வரச்சொல்.

பிங்களகேசி அறையை விட்டு வெளியே போய் ஓர் புறமாக நின்றுகொண்டிருக்கிறாள்.

வஜ்ரதம்ஷ்ட்ரன் வருகிறான்.

வ:—என்னை அழைப்பித்ததேன்?

ச:—இந்த ஆசனத்தமர்;

வஜ்ரதம்ஷ்ட்ரன் உட்காருகிறான்.

ச:—நண்ப! நேற்று நாமிருவரும் உத்தியான வனத்தில் பேசிப் பிரிந்தபடி மாயாவதியிடம்போக முடியாமல் போய்விட்டது.

பிங்களகேசி உதட்டைமடித்து முகத்தைச்சுளிக்கிறாள்

வ:—ஏன்? காரணமென்ன?

ச:—நமது தோட்டக் காவலாளியி லொருவனாகிய சிங்கநாதன் மாயாவதியின் மாளிகைக்குச் செல்லும் வழியிலுள்ள ஓர்பாழ் மண்டபத்தில் தலைவேறு உடல் வேறாகக் கிடக்கக்கண்டேன்.

பிங்களகேசி மெதுவாய்ஆ! ஆ!! என்று கூவிக் கையை உதறுகிறாள். தேகம் நடுங்குகிறது,

அங்கு வேறொருவருமில்லை. அதைப் பார்த்ததும் என் மனம் மாயாவதியை மறந்துவிட்டது. அப்படி யவன் இறந்து கிடக்கக் காரணம் என்ன வென்று வெகு நேரம் வரையில் அவ்விடத்திலேயே யிருந்து யோசித்தேன். பிறகு அங்கு சுற்றிலும் பார்த்தேன். அங்குள்ள ஓர் புன்னை மரத்தின் கிளையில் நமது மந்திரி தேனுகனது வாளுறைபிருக் கக்கண்டு அதை எடுத்துக்கொண்டு ஒன்றும் பேசாமல் வீட்டுக்கு வந்து விட்டேன். நமது மந்திரியேன் அவனைக் கொலை செய்தானென்பது புலப்படவில்லை.

பிங்களகேசி அந்தோ! நாமொன்று நினைத்து அனுப்பினேம் கடைசியில் இப்படி முடிந்ததே என்று மெதுவாய்க் கூறிக்கையைச் சொடக்குகிறாள்.

இந்த இரகசியத்தை யறியவேண்டும். சிங்கநாதனை அவன் மனைவி முதலானவர்கள் இன்னும் பார்க்கவில்லைபோற் காண்கிறது. பார்த்ததும் இங்கேனும் அல்லது அரண்மனைக் கேனும் வந்து முறையிடுவார்கள். இங்கு வந்தாலும் அல்லது அரண்மனைக்கு வந்தாலும் நான் மாயாவதியின் மாளிகை போயிருப்பதாக மந்திரிக்குத் தெரிவித்து அவனைக் கொண்டே இந்தக் கேஸை விசாரிக்கும்படி செய்; அவன் எப்படித் தீர்ப்புச் செய்கிறான் பார்ப்போம். மந்திரி தான் அவனைக் கொன்றிருக்கவேண்டும் என்றெண்ணுகிறேன். காரணமட்டும் தெரியவில்லை. இதைப் பார்ப்போம்.

பிங்களகேசிச்குக்காலும்கையும் பதைக்கின்றன. பிரமித்து நிற்கிறாள். மெதுவாக, மந்திரி சிங்கநாதனையேன்கொன்றான்பாவி நான் சொன்னபடி அவன் மாயாவதியைக்கொன்று திரும்பினபோது வழியிற்கண்டு கொன்று விட்டானோ? அப்படியாயின் நல்லதே! அவளைகொல்லப் போகும்சமயத்தில்கண்டுகொன்றிருப்பானாயின் ஆ! ஆ!! என்ன செய்வேன் என்கிறாள்.

நான் இப்பொழுது மாயாவதியின் மாளிகை செல்கிறேன். இதைத் தெரிவிக்கத்தான் நான் உன்னைத் தருவித்தேன். நண்ப! ஞாபகத்திலிருக்கட்டும்.

பிங்களகேசிக்கு தேகம் நடுங்குகிறது. என்ன செய்வேன்! என்ன செய்வேன் என்கிறாள்.

வ:—நானேன் வெளியிடுகிறேன். தானே வெளியாகிறது. மந்திரியின் வாளுறை எங்கிருக்கின்றது. காண்பியுங்கள்.

அரசன் அங்கோரிடத்திலிருந்து வாளுறையை யெடுத்து வஜ்ரதம்ஷ்ட்ரன் கையில் கொடுக்கிறான் வஜ்ரதம்ஷ்ட்ரன் அதை வாங்கிப் பார்க்கிறான்

ஆம்! மந்திரியினுடையது தான். அதற்குத்தான் இப்படிப் பட்ட சித்திர மமைத்திருக்கும். இந்த வாளுறை என்னிடமிருக்கட்டுமா?

ச:—வேண்டாம். இங்கேயே யிருக்கட்டும். இப்பொழுது இதை யெடுத்துக் கொண்டு வெளியே போகக்கூடாது. இது தான் விஷயம்; நீ போய்வா? நான் போகிறேன்.

வ:—சரி, போய்வருகிறேன். இதோ இங்கு வைக்கிறேன் வாளுறையை.

அங்கோரிடத்தில் வாளுறையை வைத்துவிட்டுப் போகிறான் சம்பாசுரனும்எழுந்திருக்கிறான்.

பிங்களகேசி பிரவேசிக்கின்றாள்.

ச:—பெண்மணியே! நான் வெளியே போய் வருகிறேன்.

பி:—(முகத்தைச் சுளித்துக்கொண்டு) எங்கே போகின்றீர்கள்!

ச:—வெளியே.

பி:—என் வீணே அழிந்து போகவேண்டும்.

ச:—என்ன சொன்னாய் பேதாய்.

பி:—என்ன சொன்னேன். நல்லதை நவின்றேன்.

ச:—உன்னைக் கேட்டுத்தான் ஒரு காரியம் செய்ய வேண்டும் போலும்.

பி:—கேட்டுச் செய்ய வேண்டுமென்று சொன்னதாரு?

ச:—பின்னென்ன உளறுகிறாய்?

பி:—மணந்த மனைவியின் வயிறெரிய வேறொருத்தியை மணம் புரிதல் தகுமோ?

ச:—அதனால் உனக்கு வயிறெரிவானேன்? உனக்கு என்ன நேரிடும்? உன் பாத்தியதையும் உன் சுதந்தரமும் எங்கே போயின? அவளை மணந்து கொண்டால் அவள் வேறு மாளிகையிலிருக்கிறாள். அதைப்பற்றி உனக்கு என்ன?

பி:—அது சரியல்ல. எப்படியுந் தங்களுக்கு என் மேல் வெறுப்புண்டாய் விடும். உண்டாகாமலிராது. என் பேச்சுக் கேட்கமாட்டீர்கள். என்னை அடிமை மாதிரி நடத்துவீர்கள்? என் சுதந்தரம் போய் விடும். இது நிச்சயம்.

ச:—பெண்மணீ! அப்படியெண்ணாதே; ஒருக்காலும் அப்படிச் செய்யேன். போய் வருகிறேன்.

பி:—நாதா! என்னுரை கடந்து செல்வது தகுதியல்ல; அதனால் இருவருக்கும் தீங்குண்டாகும். மாயாவதியும் தங்களை மணந்து கொள்ள இசையாள். அப்படியிருக்க, அவளை வலிய மணந்து கொள்வது தகுதியல்ல. இராவணனும் அவன் பட்டணமும் அழிந்தது எதனால்?

ச:—செய் மூதேவி! அவன் மாதிரியா நான்.

பி:—அவனைவிடத் தாங்கள் எதில் மேல்?

ச:—எதில் நான் குறைவுள்ளவன்?

பி:—முதலாவது அவனுக்குத் தலைகள் பத்தும் கைகள் இருபதுமிருந்தன. உங்களுக்கு?

ச:—செய்! உளறுகிறாய்; அவனுக்குத் தலைகள் பத்தும் கைகளிருபதுமிருந்து என்ன பயன்? இராமனென்னும் ஒருநரனுக்காற்றாமலல்லவா உயிர்துறந்தான். அவனைப்பற்றிப் பெருமை பேசுகிறாய்; செய் நீ கெட்டாய்!

பி:--இது தங்களுக்குத்தகாது. இந்த மாதிரி பிரவேசித்தஅநேக குடும்பங்கள் நிர்மூலமாய்ப் போயிருக்கின்றன. என் பேச்சைத் தட்டவேண்டாம்.

ச:--செய்! தூரகில்: நான் உன்னை நியாயங் கேட்டேனு?

சினந்து புறப்படுகிறுன்

பி:--

விருத்தம்

ஆருயிர் மனைவி யானு மனலின்வாய்ப் படுபூங் கொம்பிற்
சோர்ந்துதத் தளிக்க வேருேர் தோகையை நாடேலென்ற
சீரிய மொழிகே ளாத தீயநீ யழிதல் திண்ணம்
பாரினிற் கற்பின் மிக்கோர் பகர்மொழி பழுதா காதே

மன்னு! உன் ஆருயிர்க்கொப்பாகிய மனைவி யான் அனலின் வாய்ப்பட்ட பூங்கொம்பைப் போல் தத்தளிக்க, நீ வேறொரு மாதை மணக்க நினைத்துச் செல்லுதல் தகாதென்று சொன்னேன். அதை நீ கேட்கவில்லை. ஆகையால் உனக்கழிவு உண்டாவது திண்ணம். ஏனெனில், உலகத்தில் கற்புடையோர் சொல் பழுதாகாது. அதுபோல் என் சொல்லும் வீணுகா தென்றறிவாய்.

ச:—செய்! இந்த விஷயத்தில் அதினும்இச்சமயம் நீ என்ன சொல்லினும் நான்கேளேன். இதனுல் எந்தக்கேடு வரினும்சரி; உன் சாபத்துக்கும் என்மனமஞ்சாது. தூரகில்.

போகிறுன். பிங்களகேசி எதிர் நின்றுகையைப் பிடித்து தடுக்கிறுள், சம்பாசுரன் உதறுகிறுன். மீண்டும்பிடிக்கிறுள்.

பி:—நான் உயிர்துறந்து விடுவேன். தரியேன் இனியோர் கணமும் என்வார்த்தையைத தட்டவேண்டாம்.

ச:—கையைவிடு, தடைசெய்யாதே! செய்! தூரவிலகு.

கையைத் திமிரிக் கொண்டு போய்விட்டான். பிங்களகேசி தரையிற் புரண்டு அழுகிறுள்,

# இரண்டாம் அங்கம்.

## மூன்றாங் காட்சி.

---

இடம்:—மாயாவதியினுடைய மாளிகையின் ஓர் புறம்.

காலம்:— அந்திவேளை

பாத்திரங்கள்:—தாதிகள், மாயாவதி

தாதிகள் தங்கள் தலைவி சுமதி
யோடு கூடிச் சம்பாஷித்துக்
கொண்டிருக்கிறார்கள்.

சு:—(மற்றவர்களை நோக்கி) என்ன எல்லாரும் இப்படிப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். இப்பொழுது நாழிகை என்ன வாயிற்று தெரியுமா? இன்று மன்னன் இங்கு அவசியம் வருவார். நேற்று வராததற்குக் காரணந் தெரியவில்லை. நாம் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். கோபமாய் வந்தாலும் வருவார். ஏற்கனவே அவர் நம்மீது கோபங்கொண்டிருக்கிறார். மாயாவதி ஊணுறக்கமில்லாதிருப்பதற்குக் காரணம் நாம் தானென்கிறார். கொன்றுவிடுவேன், உண்மையைச் சொல் என்றும் நேற்றுக் கூறினார்.

(ஒருத்தியைப் பார்த்து) நீ மாயாவதியிடம் போய் மன்னன் இன்று வருவாரென்று சொல்லி. அலங்காரம் செய்துகொண்டுஉபவனத்திற்குச் செல்லத் தயாராயிருக்கும்படி சொல். (மற்றும் இரண்டுபேரைப் பார்த்து) நீங்களிருவரும் உபவனத்திற்குச் சென்று அங்கு ஆசனங்களைப் போட்டு நீர் தெளித்துச் சுத்தப்படுத்தி வைத்துவிட்டு, அங்கேயே யிருங்கள்; மாயாவதியை அழைத்துக் கொண்டு நான் சீக்கிரம் வருகிறேன். நேரமாயிற்று.

எல்லாரும் போகிறார்கள்.
திரை மாறுகிறது.

மாயாவதி யிருக்கும் அறை.

மாயாவதி அசுரன் வரும் செய்தி
கேட்டுப் புலம்புகிருள்.

கொச்சகம்

பெண்ணுக மண்மீது பிறந்திடவும் பிறந்து மனம்
புண்ணுக நொந்திடவும் புகலரிய துன்பமுற்றுக்
கண்ணிரீர்சோரக் கதறிடவும் விதித்ததென்னே
மண்ணுதி பூதமதாய் மருவும் பராபரமே.

பெற்றோரைப் பிரிந்திடவும் பிரிந்துமனம்பேதுறவும்
சற்றேனு மிரக்கமிலாச் சழக்கரிடம் சிறைப்படவும்
குற்றேவல் புரிந்திடவும் கோதை செய்த பாபமென்னே
பற்றேது மில்லார் பரவும் பராபரமே.

ஆதார மில்லை யருள்பெறவே யெனினுமிந்த
போதேழை செய்த பிழை பொறுப்பதுவு முன்கடனே
மாதா வெனவரற்றி வருந்துமக வுக்கிரங்கா
மாதாவும் மாதாவோ மலடியன்றே பராபரமே.

புலம்பிச் சோர்கிருள்.

தா:—இப்படியெல்லாம் செய்யாதே. மன்னன் வந்து விடுவார். வந்தால் நீ இப்படிச் செய்வதைப் பார்த்தால் கோபங் கொள்வார்.சீக்கிரமாக அலங்கரித்துக்கொள்.

மா:—ஆ! ஜகதீசா! அந்தோ! இந்தப்பாவி யலங்கரித்துக் கொள்ளவும் வேண்டுமோ? இதுவும் ஒரு வேடிக்கையா உனக்கு.

தா:—சீக்கிரமாகச் செய்துகொள். உபவனம் போகவேண்டும். உன்னுல் எங்களுக்கு அளவற்ற துன்பமுண்டாகிறது. நீ வீணே அடஞ்செய்யாதே. மகாராஜனைக் கல்யாணம் செய்துகொள்ளக் கசப்பா? செய்! நீயொரு பெண்ணு! என்ன ஆச்சரியமிது? எங்கள் சொரூபத்தைக் கண்டிருல் தான் எழுந்திருப்பாய் போலிருக்கிறது.

மா;—ஆ! ஆ! கருணுநிதியே ! உனக்குக் கண்ணில்லையா ?

எழுந்து தலையில் அடித்துக் கொள்கிருள்.

சுமதி வருகிறாள்.

சு:—ஏன் இன்னும் தாமதம். நேரமாயிற்றே; மாயாவதி! வீண் வம்பு பண்ணாதே, சீக்கிரம் புறப்படு.

மா;—(தனக்குள்) ஜகதீசா! விதி வலிது! பாபம் பொல்லாது!! அனுபவித்தே யாகவேண்டும் போலும். வந்தது வரட்டும். நாம் இவ்வலங்கோலத்தோடு அவன் முன் போகவேண்டாம். நாம் ஒழுங்காகச் சென்று அந்தப் பாவிக்கு நம்மீது கோபமுண்டாகாதபடி செய்வோம். பிறகு தந்திரத்தால் இவனை ஏமாற்ற வேண்டும். (வெளிப்படையாய்) இதோ போகிறேனம்மா! ஏன் துன்பப்படுத்துகிறீர்கள். என்பாபத்தை நானனுபவித்துத்தானாகவேண்டும்.

ஓர் புறமாகச் சென்று அங்கிருக்கும் கண்ணாடியைப் பார்த்து தலை சீவி முடித்து அலங்கரித்துக் கொள்கிறாள்

சு—சீக்கிரம் வா?

மா:—இதோ வந்து விட்டேன்.

(வருகிறாள்)

சு:—(மற்ற தாதிகளை நோக்கி) கண்கொண்டு பார்க்க முடியாத அலங்கோலத் தோடிருந்தவள் இப்பொழுது எப்படி யிருக்கின்றாள் பார்த்தீர்களா? மணக்கோலத்திற்குப் புறப்பட்ட மங்கை போலல்லவா காண்கிறாள். இதுவுமன்றி முகத்தில் சந்தோஷக் குறியும் காண்கிறதே. இவளது எண்ணம் என்னவோ தெரியவில்லையே. நான் மன்னனிடத்தில் மாயாவதி ஊண் உறக்க மில்லாமலிருக்கிறாளென்று தெரிவித்தேனே. அது இப்பொழுது பொய்யாகவல்லவோ போகும் போலிருக்கிறது. இதற்கென்ன செய்வது! நேற்று நான் பொய் சொல்வதாக வல்லவா கூறிக் கோபங் கொண்டார். நாம் இவளோடு உபவனத்திற்குப் போய் மன்னன் அங்கு வந்ததும் அவன் கோபத்திற் கிலக்காகாமல் விலகி விடுவோம்.

தா:—அப்படித் தான் செய்யவேண்டும்.

மாயாவதி வந்துவிட்டாள், எல்லாரும் போகிறார்கள்,

# இரண்டாவதங்கம்

## நான்காம் காட்சி

இடம்- உபவனத்தில் ஓர் மண்டபம்.

காலம்- பொழுதுபோனசமயம்

பாத்திரங்கள்- தாதிகள், மாயாவதி, சம்பராசுரன்

மாயாவதியை யழைத்துக்கொண்டு
தாதிகள் வந்து அவளை ஓர் ஆசனத்தில்
உட்கார வைக்கிறார்கள்.

மா:—(உட்கார்ந்து) ஈசா! என்செய்வேன் !!

சு:—என்ன மாயாவதி உன் அழுகையை நிறுத்தினபாடில்லை யா? வெகு நன்று. மன்னன்வந்துவிடுவார் அழுகையை நிறுத்தி ஏதேனும் பாடிக் கொண்டிரு; உன் பாட்டைக் கேட்டு அவர்கள் சந்தோஷப்படட்டும்.

மா:— ஆ! ஆ!! ஜகதீசா! (சுமதியைப்பார்த்து) பாடவும் வேண்டுமோ? யான் எதைநினைத்துப்பாட? என்விதியை நினைத்தா; அல்லது பிறப்பினைநினைத்தா?

சு:—ஏதேனு மொன்றைக் குறித்துப் பாடு.

சம்பராசுரன் ஓர் புறமாக வருகிறான்
சரேலென்று மறைந்து அவர்களைக்
கவனிக்கிறான்.

மா:—[தனக்குள்] அந்தோ! யானென்செய்வேன். இப்பொழுது பாடவும் வேண்டுமோ? வீடுபற்றியெரியும் சமயத்தில் புகைச் சுருட்டுக்கு நெருப்புக் கேட்பது போலல்லவா காண்கிறது. பாடுவதற்கு இதுவா தருணம்? இன்னும் சிறிது நேரம் போனால் ஆடு என்று சொல்வார்கள் போலிருக்கிறதே. ஆ! ஈசா! ஐயோ! பேய்க்கு வாழ்க்கைப்பட்டால் புளிய மரத்திலேற வேண்டுமென்பது போல் நாம் இந்தச் சண்டாளன்கையில் அகப்பட்டபடியால் பாடுவதுமன்றி ஆடச்சொன்னால் ஆடவும்தான் வேண்டும்.

ஈசனைக் குறித்துப்பாடுகிறாள்.

(தலையே நீ வணங்காய்-என்ற தேவாரமெட்டு)

இன்னந்தயவில்லைபா- எரி-தீயிற்படு புழுவாய்த்
தன்னந் தனியே தவிப்பேனையாட்கொள-இன்னம்

சம்பராசுரன், நமது வருகையை யெதிர்ப்பார்த்தும் தான் தனியே விடப்பட்டிருப்பதையுங் குறித்து இவள் வருந்துகின்றனள் என நினைத்து உதட்டைமடித்துத்தலையை யசைக்கிறான். இதோ வந்து விட்டேன், என் வருந்துகின்றனை? என்கிறான். உட்செல்லக்காலெடுக்கின்றான். இன்னும் பார்ப்போம் என்று மறைகின்றான்.

பாராயோ என்முகம் நீ-படு-பாவிபடுந்துயரம்
தீராயோ நீ யன்றி நாயேற்கிங்கார்கதி-இன்னந்

ஊ:—(மாயாவதிபாடி முடிந்ததும்)

ஞ ஞ ஞ ன ஞ-ஞ ஞ ஞ ன ஞ
ஞ ஞ ஞ ன ன-ஞ ஞ ஞ ன ன

---

வந்தேன் வந்தேனன்-வந்தேன் வந்திதோ-
தந்தேன் வந்தனம்-தந்தேன் வந்தனம்
மானே நீ மனம்-வருந்தப் பொறுப்பேனோ
தேனே நீமனம்-திகைக்கப் பொறுப் பேனோ

பாடிக்கொண்டேஎதிரில் வருகிறான்

தா:—(யாவரும் ஒருங்கேயெழுந்து) மகாராஜாவே வந்தனம். இவ் வாசனத்தமர்ந்தருள்வீராக.

எல்லாரும் வந்தனம் செய்கிறார்கள் சம்பராசுரன் ஆசனத்தமர்கிறான். மாயாவதி ஆசனத்தை விட்டெழுந்து தலைகுனிந்து நிற்கிறாள். பிறகு தாதிகள் நகைத்துக் கொண்டே விலகுகிறார்கள்.

சம்:—(தனக்குள்) இங்கிருந்த வண்ணத்தில் அழைத்து இவள் நடையழகைக்கவனிப்போம்.

பல்லவி

வா-வாவாவாவாவா-மட-மாதரசே! யிங்குவா-வாவாவாவாவா

அ-ப-வி

மனமுன்னைநாடியே அனல் மெழுகாகுது
அனமென நடந்தென தாருயிர்காத்திட- வா

சரணம்

பூங்கணைதூவியென் ஆருயிர்சோர
போர்புரி கின்றனன் என் னெடுமாரன்
மாங்குயிலே யிந்த வாதனை தீர
மகிழ்ந்தொரு முத்தந் தந்தென்றனைச்சேர-வா

மாயாவதி பெருமூச்செறிகிருள். தேகம் நடுங்குகிறது, திரும்பிப்பாராமல் குனிந்த வண்ணத்திலேயே யிருக்கிருள். இருவரும் சிறிது நேரம் மௌனம்

ச—(தனக்குள் மூக்கின் நுனியில் கையைவைத்துக்கொண்டு) இப்பொழுது இவள் பாடியதாலும் இவள் அலங்கரித்துக்கொண்டிருப்பதாலும் நமது விருப்பத்திற் கிசைந்து விட்டதாகக் கருதினேம். உள்ளே ஒரு எண்ணமும் வெளியே ஒருஎண்ணமும் கொண்டிருக்கிறுப்போலல்லவா யிருக்கிறது. சீ இவளை—

கோபத்துடனெழுந்திருக்கிருன்.

ஆ! நான்என்ன எனது இன்னியிரையே கோபித்துக் கொள்கிறேன். செய்! கோபங் கொள்வது பிசகு. நயவுரை யாடுவோம். (வெளிப்படையாய்)

விருத்தம்

அன்னமே தேனே மானே அப்புவி புகழு மாதே
உன்னையான் மருவ வெண்ணி யுவந்துமே யிங்கு வந்தேன்
என்னுரை செவியிற் கொள்ளா தென்முகந் திருப்பிப் பாரா
தின்னவா றிருப்ப தென்னே இங்குவா முன்னே பின்னே!

அன்னமே! உன்னையான் மருவ எண்ணங் கொண்டு சந்தோஷத்துடன் இங்கு வந்தேன். நீயோஎன்மொழி கேளாமலும்என்முகத்தைத்திரும்பிப்பாராமலும்இருக்கின்றுய்.இப்படி

யிருப்பதன்காரணம் யாது! சீக்கிரமாகவா! வந்தென் மடிமீதிருந்து ஒருமுத்தங்கொடு. என் கண் மணியே! வா

மா:— (சம்பரா சுரனைநிமிர்ந்து பாராமல்) குனிந்தவண்ணத்தில்
(தில்லைவெளியிற்கலந்துகொண்டாலவர் திருப்பியும்வருவாரோ
என்ற மெட்டு)

அதிபலவீரனே! அசுரர்கள் தீரனே அடுக்கும் நீதியிதோ!—
என்னை
யிதுகொண்டோகொண்டுவந் திது நாளும் வளர்த்ததும்
ஏற்கும்நீதியிதோ-அதிபல
அன்னைதந்தையரினும் அன்பாய் வளர்த்தவர்க் கடுக்கும்
நீதியிதோ-இந்தச்
சின்னஞ்சிறியேற் கிங் கின்னல் விளைப்பதும் சீயெனும்
செய்கையன்றோ-அதி
இந்த மதியுனக் கந்தமதியாமோ இதுவென் றன்தலை
விதியோ-ஏழை
சிந்தை பலதைக்குதே அந்தோ! அந்தோ!! இந்தச் செய்கையும்
நிற்கழகோ-அதிபல

ச—(எழுந்து இருகரங்களையும் நீட்டிக்கொண்டு)

### வெண்பா

இராகம்-சங்கராபரணம்

கண்டுன்னைக் காதலித்த கன்னிப் பருவமுதற்
கொண்டுவந் தேவளர்த்தேன் கூடிடவே-ஒண்டொடீ!
காய்முற்றி யுண்ணுங் கனியான பின்பெவரே
வாய்பொற்றி நிற்பரிவ் வையம்.

பிரகாசம் பொருந்திய வளையலணிந்த பெண்மணியே! நீ கன்னிகையாயிருக்கும் போது உன்னைக்கண்டேன். அப்பொழுதே உன் அழகில் ஆசை கொண்டு இங்கெடுத்துவந்து நீமங்கைப்பருவமடையும் இந்நாள்வரையிற் காத்திருந்தேன். பழுத்த பின் உண்ணலாமென நினைத்து பறித்துவந்த காய் பழமானபின்பும்அதையுண்ணமல் வைத்திருப்பதுமுண்டோ? என்மனதிற் கிசைந்த மாணிக்கமே!

வெண்பா

இராகம்-சங்கராபரணம்

மற்றென்று சாற்றுவன்கேள் மாதவரும் நெஞ்சுருகும்
பொற்றொடியே நிற்போன்ற பூவையைக்கண்-ணுற்றபின்பு
ஆடவரில் யாரே அணங்கவேள் கையம்புக்
கிடுபடா நிற்பவர்சொ லிங்கு.

உலகப்பற்றற்ற மகாதவசிகளும் மனமுருகும் பேரெழில் வாய்ந்த பொற்றொடியே! உன்னைப்போன்ற ஒருபெண்ணைப் பார்த்த பின் மன்மதனுடைய கையம்புக்கு ஈடுபடாதிருப்பவர் இந்த உலகத்தில் யார்? இதையறியாமற் குற்றங் கூறுகின்றாயே; கண்மணி! விரைவாக வந்து என்மடிமீது உட்காரு.

மா:—(சினமடைந்து)

இராகம்-தன்யாசி

பல்லவி

அ-பல்லவி

மானுடமாதன்றோ-நானோர்-மானுட மாதன்றோ
மானுடரொடுவிலங் கினங்களைப் புசித்திந்த
ஊனுடல் வளர்த்திடு மீனவசுரவீர- மானுட

சரணம்

என்னை மணக்க நினைப்பதென் நியாயம்?
ஈசனு மேற்குமோ இவ்வனியாயம்
சொன்னேனிப் பெண்பழி தொடருமபாயம்
துரிதத்தில் வந்திடும் செல்லாதுன் மாயம்—மானு

என் போன்ற மானுடப் பெண்பழிதேடி
இறந்ததி ராவண னன்றியோர்கோடி
நீன்பேதைப் புத்தியைச் சீயெனச் சாடி
நியாயத்திற் சென்றிடு நின்புகழ் நாடி-மானு

ச:—(ஆசனத்தைவிட்டெழுந்து) பெண்மணியே!

நந்தனர் கீர்த்தனை-சேதிசொல்லவந்தேன்-
என்ற மெட்டு

இராகம்-தன்யாசி

ப—வி

நியாயங்கேட்டதாரு-பெண்ணே! நியாயங்கேட்டதாரு

அ—வி

நியாயங்கேட்ட துனையாரிதைப் போல் பல
நியாயங்கள் நானறிவேனவை வேண்டிலன்- நியா

சரணங்கள்

கொங்கலர்பூங்குழல் கோதே-இளங்
குயிலினை நிகர்மொழிமாதே-உனது
செங்கைதனைப்பிடித்திப் போதே-மணஞ்
செயவந்தேனிதைமறுக்-காதேமாதே!

மா:—(தனக்குள்) அடே! மூடா! நான் கூறுவதைக் கவனிக்காமல் பேசுகிறாய்; (கோபாக்கினி கண்களிற் பரக்கக்குனிந்தவண்ணத்தில் நின்று,) வெளிப்படையாய்-

விருத்தம்

என்னுரை செவியிற் கொள்ளா தென்னநீயுரைத்தாய்பேதாய்!
இன்னமொன்றுரைப்பன் கேணீயிசைந்துதன் கருத்துக்கொத்த
மின்னனையாளைச் சேரல் விருப்பு நல் லின்பமன்றிப்
பின்னொரு மாதைப் பேணிப் பேதுறல் மதியதாமோ?

ஏபேதாய்! என்வார்த்தையைக்கவனிக்காமல் நீ இப்பொழுது கூறியதென்ன? செய்! இன்னமொன்று சொல்கிறேன் கேள். ஒருவன் தன்னை விரும்பிக் காதல் கொண்டு மனதிற்கொத்தமாதைச் சேர்வது தான் இன்பமாகுமன்றித் தன்னை விரும்பாதவளைப்பற்றிச் சிந்திப்பதும் அவளிடம் ஆசைகொள்வதும் ஒரு ஆடவனுக்கேற்ற அறிவாகுமா? செய்! என்மேல் ஆசைகொள்வது வீணே!

இதுவுமது

இம்மதி நின்னை யன்றி நின்குலம் யாவும் வீட்டி
வெம்மைசேர் நரகத் துய்க்கும் மெல்லியர் பழிவினைகா

தம்மையோர் பாகனம்பொ னடிமலராணை சொன்னேன்
கைமெய்யாய்க் காண்பாய் நீயுங் காலம் பொல்லாது போலும்.

நீகொண்டிருக்கும் இந்த மதிபான்து உன்னையும் உன்குலத்தையுமொழித்து யாரையும் கொடிய நரகத்தில் சேர்த்து விடும். மெல்லியர்பழி வீண்போகாது. உலக சராசரங்களை யீன்ற உமாதேவியை வாமபாகங்கொண்ட ஜகதீசனது திருவடிமலராணைப்படி கூறுகிறேன்.

இதன் பலனை நீ கைமெய்பாய்க் காண்பாய். உனது காலம் பொல்லாதுபோற் காண்கிறது.

ச:—(சினமடைந்து தனக்குள்) இவள் நாம் கூறுவதைக் கவனியாமலே வாய்க்கு வந்தவாறு பேசுகிறாள். சீ இனி இவ்ளுடன் நல்லவார்த்தையாடுவது பிசகு. சற்று நம்சொரூபத்தைக் காண்பிக்கவேண்டும். (யோசித்து) இன்னுமொரு முறை நல்லவார்த்தை சொல்லிப்பார்ப்போம் (வெளிப்படையாய்) மடக்கொடியே!

நோட்டு.

பல்லவி

போதும் போதும் உன்நியாயம்
புகலுவன் கேள் நீ என்நியாயம்

அ-பல்லவி

மாதே! உனைமணம் செய்திடவே
மனமிக நாடியதினியேது
வரினும் யான் கொடுநரகில்
விழினும் அது பெரிதலவறிநீ- போதும்

சரணம்

உனைமணஞ் செய்தொரு கணமேனும்
உன்னுடன் வாழ்ந்திடி லது போதும்
நனைமலர் புனைகுழல் மாதர்புகழ்
நாயகமே யென தாருபிரே-

நாடிய வாறே தருவாய்
நளினமலர்த்திருமுகமுத்தம்—போதும்

மா:—சிவசிவ (எனக்கூறி இரு செவிகளிலும் கைவைத்துக் கொண்டு) தனக்குள் நாம் கூறும் நியாயங்களுக்கு இவன் உட்படுவதாகக்காணேம். இவனை இப்பொழுது என்ன செய்யலாம். இப்பாவியை யான் மணக்கப்போமோ? ஒருக்காலும்கூடாது. இவன் என்னைக் கொன்றாலும் சரி. கடிந்து பேசி மறுத்துவிடுகிறேன்.

இதுவுமது
பல்லவி

பித்தா புத்தியிலாப் பேயே
பேசுவதறமலசெல் நீயே

அ—வி.

எத்தாலும் முனைமணப் பதிலே
இதிலோர் சிறிது மையமில்லை
ஏனேவீண் வாதென்னே
டிடுகின்றாய் குடி கெடுகின்றாய்—பித்தா

சூ:—(மிகக் கோபங் கொண்டு பல்லை நெற நெற வென்று கடித்து எறிட்டுப் பார்த்து, ஓரே பாய்ச்சலாக மாயாவதியிடம் ஓடி வந்து)

மாயாவதி தேகம் நடுங்குகிறது. விலகுகிறாள்.

இதுவுமது
பல்லவி

என்னடி யென்னடி யிந்நேரம்
என்னொடு வீண்வா தாடுகின்றாய்

அ—வி.

நின்னடிப் போதென் முடிகொண்டும்
நீ மனமிரங்கிலை யது கண்டும்
நின்னையான் நமனுலகுக்
கிந்நொடியேயனுப் பிடுவேன் காண்—என்னடி

சினந்து பார்த்துச் செய்!
என்கிறான்,

மா:—செய்! துஷ்டா!

விருத்தம்

நல்லது நவின்ருய் நீயும் நமனுல கின்றே யானும்
செல்லு மாறுன்கை வேலென் சிரசினைக் கொய்யு மாகில்
அல்லல்தீர் தேவா யெண்ணி அதற்கொரு வணக்க மன்பாய்ச்
சொல்லியே செல்வேன் சென்று சுகமுறு வேனுன் ருலே.

நீ நல்லதே சொன்னுய்! உன் கைவேல் என்னுடைய சிரசைக் கொய்து என்னை இன்று நமனுலகுக்கு அனுப்பு மாகில் அதை எனது துன்பத்தை யொழிக்க வந்த தேவதையாகக் கருதி அதற்கொரு வணக்கங் கூறி உயிர் துறந்து சுக முறுவேன்—அப்படியே செய்

ச:—(தனக்குள்) என்ன இவள் எதற்கும் அஞ்சின வளாகக் காணேம். உயிர் துறக்கவும் துணிந்து விட்டாளே, உயிர்துறக்கத் துணிந்தவர்கள் எதற்குத்தான் பயப்படுவார்கள். ஆகையால் இவளைப் பயமுறுத்திப் பயனில்லை. நல்ல வார்த்தையே இன்னும் சொல்லிப் பார்ப்போம். (வெளிப்படையாய்) மாதே! என்னை இப்படி வெறுப்பது நியாயமா? உன் நெஞ்சு என் மீது இரங்கவில்லையா? புவிபுரக்கும் மன்னனல்லவா நான். கண்மணீ!

வெண்பா

இ-ம் சங்கரா பரணம்.

வேலைப் பிடித்த கையால் மெல்லியலே நின்னிரண்டு
காலைப் பிடித்தெனிதோ கைபிடிப்பாய்—சோலொத்த
கண்ணெனது நெஞ்சகமாங் கல்லுங் கனிந்துருகப்
பண்ணுதிதார் குற்றமெனப் பார்.

பெண்ணே! இதோ நினதிரண்டு காலையும் பிடித்து வந்தனம் செய்கின்றேன். கண்ணே! என் கை பிடித்தாள். சேலை யொத்த உனது கண்ணனது எனது நெஞ்சமாகிய கல்லையும் உருக்குகிறது. இதுயார் குற்றம்? நீயே யோசித்துப்பார்.

மா:—நன்று! நன்று!! நீ மதியுடனே பேசிகிருயா? அல்லதுமதியை விட்டுப் பேசுகிருயா? மதி உன்னை விட்டு ஒழிந்து விட்டது போலிருக்கிறது. இன்றேல் இவ்விதம் நீ பேசாய். என்

கண்ணு உன்னைப் பார்க்கிறது. என் கண்ணைப் பார்ப்பது உன் கண்களல்லவா? அப்பொழுது குற்றம் யாருடையது? எனதா?-செய்! என்னைப் பார்க்கும் உன் கண்களும் என்னைப் பற்றிச் சிந்திக்கும் உன்மனமுமே குற்றத்திற்குப் பாத்திபப் பட்டவைகள். ஆகையால் அவைகளை ஒழுங்குடனிருக்கும்படி கண்டித் தடக்கு. பின்நீசுகப்படுவாய். இன்றேல் நீஅழிவாய். இதுதான் நான் உனக்குச் சொல்லத்தக்கது. நீ செல். வீண் வாதாடாதே.

ச:—பெண்ணே! குற்றம் என்னுடையதாகவே யிருக்கட்டும். நீ கோபியாதே. இன்று ஒரு முத்தங் கொடு போதும். நேரமாகிறது. மறுக்காதே.

மா:—மன்னு! இந்த எண்ணம் உன்னைக் கெடுத்துவிடும் என்று எத்தனைமுறை கூறியும் உன் மனதிற்பதியவில்லையே; ஏன்? அந்தோ!

''நண்டுசிப்பி வேய் கதலி நாசமுறுங் காலத்துக்
கொண்ட கருவழிக்கும் கொள்கைபோல்-ஒண்டொடீ!
போதந் தனங்கல்வி பொன்றவரும் காலமயன்
மாதர்தம் மேல் வைப்பார் மனம்''

என்பதல்லவா ஆன்றோருடைய நீதிவாக்கு. என்னே உன்மதி. என்னுயிரை இழப்பதற்குச் சித்தம். நீ என்னை என்னசெய்தாலும்சரி; உன்கருத்துக் கிணங்கேன். உன்கையையும் பற்றேன்.

ச:—(தனக்குள்) என்ன இவளுடைய எண்ணம் மாறாமலே இருக்கிறது. இப்பொழுது இவளைக் கட்டாயப் படுத்தவேண்டாம். பிறகு வருவோம். (வெளிப்படையாய்) பெண்ணே! உன் மனம் சரியான நிலைமையில் இல்லைபோ லிருக்கிறது. நான் இவ்வளவு தூரம் சொல்லியும் மறுத்தேபேசுகிறாய்; இன்றைக்கு எட்டாவதுநாள் இந்நேரத்திற்கு நான் உன்னிடம் வருவேன். அப்பொழுதும் இம்மாதிரி நீ பதிலுரைப் பாயாகில் உன் னுயிர் என் கைக்கத்திக் கிரையாவது திண்ணம். நீ இதை யுறுதியாய் நம்பு. நான் போகிறேன். போகிறான்.

## இரண்டாம் அங்கம்

முற்றிற்று.

## மூன்றுமங்கம்

### முதற் காட்சி

---

இடம்:—கடற்கரை

காலம்:—காலை

பாத்திரங்கள்:—தூர்த்தன், பேவாயன், விதண்டன், சண்டன், பிர சண்டன் ஏகல்

தூர்த்தனென்ற அசுரச்செம்படவனொருவன்
தன்வலையிற்சிக்கிய ஓர் பெரியமீனைக்
கண்டு வியப்படைந்துதன் நண்பர்
களுக்குக் காட்டிப் புகழ்கிறான்.

தூ:—(சந்தோஷத்தினால் பாடுகிறாள்)
(ஐயே ஒரு சேதிகேளும்-என்ற நந்தன் சரித்திரமெட்டு)
ஆகா ! இந்த மீனைப்பாரு - கையில்-அகப்படுமோ கண்ணிற் புலப்படுமோ
ஓகோ ! இந்த மீனைப்பாரு-ஈதன்-உரத்தையுந் திறத்தையும் உரைக்கப்போமோ-ஆகா
அண்ணே ! என்னமீனிதண்ணே - நீண்ட-செண்டை மீனோ பெருங்கொண்டைமீனோ
அண்ணே!என்னமீனிதண்ணேஇதைப்போற்கண்டதுண்டோ அன்றிக்கொண்ட துண்டோ-அண்ணே

வி.— (மூக்கில் கையை வைக்கிறான்) அடேதூர்த்தா ! இது எங்கிட்டுச் சிக்கிச் சீடா ! எந்தாப் பெரியமீன் ! ஏலே! கொத்தாங் ! என்னுயுசுக்குள்ளே இதைப்போல் பார்த்த தில்லையே ! இதுக்குப்பேரென்ன அண்ணே !

பே:—இது திமிங்கலத்தைச் சேந்திருக்குமா அண்ணே ! நம்ம பிரசண்டனைக் கேட்டாக்கச் செல்வான். அவன் காலங்கண்ட மனிசன். அவனுக்கு எங்காயி இங்கப்பன் அவப்பனுக்கு அப்பன் அவுங்கப்பன் எல்லாரையுந் தெரியும். அவன் வயசை அறிஞ்சவங்க யில்லே. அவன் தான் அறிவானிதை.

தூ:—ஆமாடா! ஆமா! நல்லாச்சென்னே.

வி:—அவன் எங்கே?

பே:—அதோ அங்கேயிருக்காங்க கூப்பிடட்டா!

ச:—அண்ணே அவுங்கல்ல. இங்கிருக்கிறவுங்க மேலத்தெருக்காரங்க.

தூ:—அவுங்க எங்கேயிருக்காங்க

ச:—அதோபாரண்ணே! வந்துட்டிருக்காங்க.

தூ:—ஆமாமா-கூப்பிடட்டா! (கூப்பிடுகிருன்)

பிரசண்டன் என்ற கிழவன் ஏன் என்று கேட்டுக்கொண்டு லொங்கு லொங்கு என்று ஓடிவருகிருன்.

தூ:—(கொம்மாளம் போட்டுக் குதித்துக்கொண்டு) அண்ணே! அண்ணே! இந்த மீனேப் பார்த்தீங்களா?

பி:—(குனிந்து உற்றுப்பார்த்து) ஐயோ அப்பா!

பயந்து ஓடுகிருன்,

எ:—வாங்கண்ணே! பயப்படரேங்களே? மீனுசெத்துப்போச்சுங்க. ஒன்றுஞ் செய்யாதுங்க.

பிரசண்டன் மீனின் பக்கம் வருகிருன்.

பி:—(பழையபடி உற்றுப்பார்த்து ஈனசுரத்துடன்) செத்துப் போச்சா' அடே இதுயாருடா பிடிச்சது.

தூ:—ந்ான்தான் அண்ணே! நான் தான்.

பி:—(அவனேத் தட்டிக்கொடுத்து) பலே? பலே! உங்க பாட்டனுக்குப் பாட்டனுக்குப் பாட்டனேயும் எனக்குத் தெரியும். இப்படியாப்பட்ட மீனே நான் பாத்தேதயில்லே. இது என்னவோ அதிசய மாத்தானிருக்குது. நாமெல்லாம் பங்கு போட்டுக் கிட்டா ஒரு வருசத்துக்கு எல்லாரும் கறியாக்கிச் சாப்படலாம்.

தூ:—எலே! பாத்தியாடா?

கன்னத்தில் கையை வைக்கிருன்.

பி:—என்ன ! உன்னைச் சும்மாவாகேட்டான்.

தூ—எல்லாரும் சேர்ந்து எனக்கு என்ன குடுப்பேங்க.

பி:—என்னவோ ணும்

தூ—(தன் தலைமேலிருந்த ஓலைக்குல்லாவை யெடுத்து) இந்தக் குல்லாவிலே நூறு கொண்ட பொன்வேணுங்க.

பி—எ ஆயாளா ! போதுமா? போதுமா?

மற்றவர்களும் வாயில் கையைவைக்கிறார்கள்.

அடேங்கொள்ளாங் அம்மாத்திரம்பொன்யாரடாவைச்சிருக்கா!

தூ:—கூளுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை; நான்கேட்டபடி கொடுத்தாக் கொடுங்கோ. இல்லாட்டிப் போங்க.

பி:—உனக்கு ஆரு அம்மாத்திரம் பொன்கொடுக்கப் போறாங்க? ஆசை பிடிச்சிப்பே அலையறான்?

தூ:—எ ஆயா! கிளவன் வாயடி கையடி அடிச்சிக்கொண்டுக்கிட்டுப் போகப்பாக் கிறாண்டா? நீ என்னடா? எங்கபஜமான் ராசா கிட்டக்கொண்டுக் கிட்டுப்போறேன். அப்பாஎன்னடா?

பி:—பலே அங்கே போனால்தான் கிடைக்கும். ஆனால் சமயம் எப்படி யிருக்குமோ? ஒருசமயம் கொடுத்தாத்தான் போச்சு. சும்மா போகச் சொன்னா என்னபண்ணுவே.

தூ:—ராஜா பார்த்து எப்படிச் செஞ்சாலும் சரி. கொடுத்தா வாங்கிக்கிறேன். இல்லாட்டி ராசாதயவு கிடைக்குமல்ல.

பி:—அப்படியேசெய்.

தூ:—ஆமண்ணே. அப்படித்தான்செய்யப் போறேன்.

மீனைத்தூக்குகிறான் தூக்கமுடியவில்லை விதண்டனை உதவிக்கு அழைக்கிறான்.

வி:—(கைசாடைசெய்து) என்னையும்பார்த்துக் கொள்ளணும்.

தூ:—எண்ணே! உபகாரம் செய்தவனை மறப்பேனா? சீ!எந்தப்பாவி அப்படிச் செய்வான்.

வி:— சரி,

இருவருமாக மீனைத்தூக்கித் தோளில்வைத்துக் கொண்டுபோடிக்கொண்டேபோகிறார்கள்,

---

## மூன்றுமங்கம்

### இரண்டாவது காட்சி

---

இடம்—கொலுமண்டபம்

காலம்—பகல்

பாத்திரங்கள்—சம்பராசுரன், வஜ்ரதம்ஷ்ட்ரன், தேனுகன், பிரமுகர்கள்.

ச:—சபையோர்காள்! நேற்று நடந்தகேஸில் மந்திரி எப்படித் தீர்ப்பு செய்கிறாரோ வென்றிருந்தேன். வெகுநன்றாய்த் தீர்ப்பு செய்திருக்கிறது. யாராயிருந்தால் என்ன? குற்றவாளியான பின் பிள்ளைகளென்றாவது, மனைவி யென்றாவது, பிரபுக்களென்றாவது, தாட்சிண்யப்படுவது நியாயமாகுமா? மந்திரீ! நீ நல்லகாரியம் செய்தாய்; ஒரு பெண் பிள்ளைக் கிருந்ததைரியத்தைப்பார்த்தாயா? மாயாவதியைக் கொல்வதற்காகத்தான் சிங்கநாதனை அவள் அனுபபினளென்பது உனக்கு எப்படித்தெரியும்.

தே:—ஐயனே! நேற்றுக்காலையில் நானும் தமது மூத்தகுமாரன், சுப்ரதீகனும் தங்கள் அரண்மனைக்குப் பின்புறம் நின்று கொண்டிருக்கையில் தமதுமனைவி மாயாவதியைக் கொலைபுரியும்படி சிங்கநாதனுக்குக் கட்டளையிட்டாள். அதன் பிறகுதான்நான்சிங்க நாதனை வழியில் மறித்து அவன் எதிர்த்ததும் கொலைபுரிந்தேன். மேலும் நானும்தமதுகுமாரனும்நிச்சந்தேகமாயறிந்த குற்றமானதால் தான் மகாராஜனது மனைவி யென்றும் பாராமல்ஆறுமாதக்கடுங்காவல் விதிக்கத்துணிந்தேன்.

ச:—மந்திரி தேனுகா! ஆறுமாதக்கடுங்காவல் தண்டனை சிறிதும் போதாது?

வ:—ஏனோ?

ச:—ஏனா? இது எப்படிப்பட்ட குற்றம்?

வ:—எப்படிப்பட்ட குற்றம் (மெதுவாய்) யாரும் தன்குற்றம்பார்ப்பதில்லை.

ச:—நண்ப! தன் குற்றம் பார்ப்பதில்லையா? யார் அப்படியிருப்பது

வ:—எல்லாருந்தான்.

ச:—நான் கூடவா?

வ:—தங்கள் பூதாதைகூடத்தான்.

ச:—அதென்ன அப்படித் தெரிவிக்கின்றாய்;
நானென்ன குற்றஞ் செய்திருக்கிறேன்.

வ:—உலகத்தில் குற்றஞ் செய்தவர்கள் தாங்கள் செய்தது குற்றமென்றுணர்ந்தார்களாயின் அவர்கள் சரியாய் நடக்கமாட்டார்களா? அதுதானே கிடையாது.

ச:—அப்படி நான் செய்ததென்ன?

வ:—தங்களுக்கே தெரியும்? மந்திரி செய்த தீர்ப்பு மிகவும் நியாயம்போலும்!

ச—வீண்வார்த்தையாடாதே. நான் செய்ததப்பிதம் இன்னதென்று சொல். பிறகு மந்திரியைப் பற்றிக் கவனிப்போம்.

வ:—இப்பொழுது தங்கள் மனைவியார் தண்டிக்கப்பட்டது யாரால்? இதை யோசியுங்கள்.

ச:—யாரால், அவள் செய்த தீயசெயலால்.

வ:—அத்தகைய தீய செய்கையைச்செய்ய அவள் எதனால் தூண்டப்பட்டாள்? இப்பொழுதாவது நினைத்துப்பாருங்கள்?

ச:—தெரிந்துகொண்டேன்; என்னாலென்பாய்; நான் மாயாவதியை மணந்துகொண்டால் இவளுக்கென்ன?

வ:—இவளுக்கென்னவா? வெகு ஒழுங்கு? நீங்கள் மாயாவதியை மணந்துகொண்டால், அம்மாள்:—

சபையார்நகைக்கிறார்கள். சம்ராசுரன் புன்முறுவல்செய்கிறான்.

ச:—செய் உட்காரு; நீ எப்போதும் இப்படித்தான். வம்புபேசுவது

வ:—வம்புபேசினால் தான் நியாயம் புலப்படுகிறது. இல்லாவிட்டால்

ச:—இருக்கட்டும்! மந்திரி செய்த தீர்ப்பு எப்படி ?

வ:—தீர்ப்பு எப்படி? நியாயப்படியில்லாவிட்டாலும் தங்களுக்கேற்றபடி யிருக்கிறதே. அது தான் விசேஷம். பேஷ் அரசனுக்கொத்த மந்திரிதான்.

கண்டகன் பிரவேசிக்கிறான்.

க:—சாமீ! எசமாங்களுக்கு வந்தனம்.

தே:—யாரவ னங்கே.

க:—நான் தான் கண்டகன்?

தே:—ஏண்டா? விசேஷமென்ன!

க:—பெலத்த மீனு விலைக்கு வந்திருக்குங்க.

தே:—எங்கேயடா?

க:—தெருவில்

தே:—இங்கு அழைத்துவா அவனை

க:—இதோ　　　ஓடுகிறான்.

திரைமறைகிறது

தெருவில் செம்படவர்கள்மீனைத்
தூக்கிக்கொண்டு நிற்கிறார்கள்.
கண்டகன் அவர்களோடு
சம்பாஷிக்கிறான்.

க:—எங்கப்பா வந்தீங்க? (மீனைப்பார்த்து) எங்கேயடா பிடிச்சேங்க இதை? ஏங்கொள்ளே?

தூ:—கடலிலே சாமி! உள்ளேபோய் ராசாவைப் பாக்கணுங்க;

க:—இந்த மீனோடேயா? ஏ அப்பா! வாசப்படி கொள்ளாதே. நானென்னசெய்வேன்? இருக்கட்டும் ராசாவைப் பார்த்து—

தூ:—இதை ராசாகிட்ட காட்ட!

க:—காட்டி என்ன செய்கிறது?

தூ:—பார்த்தால் எதனாச்சிக்கும் இனாம் கொடுக்க மாட்டாங்களா?

க:—(தனக்குள்) உள்ளேபோனால் இந்த மீனில் ஒட்டின தூசிநமக்கு அகப்படுமா? இப்பொழுதேமடக்கிக்கணும் (வெளிப்படையாய் இராசா என்னத்தேத இனாங்கொடுக்க போறாங்க; மீனைப் பிடிங்கிக்கொண்டு துரத்திவிடுவாங்க.

தூ:—அப்படி அவுங்களே! ஏழை வயிற்றில் மண்ணைப் போட்டு எடுத்துக் கிட்டா எடுத்துக் கிட்டுப் போறாங்களே!

க:—அதிலுனக் கென்ன லாபம்?

து:—ஒன்றும் லாபம் வேண்டாம். இராசா பார்த்து சந்தோசப்பட்டால் போதுங்க.

க:—உனக்கென்ன வோணும்; கேள் நான் தாரேன்.

து:—(தனக்குள்) இவனிடம் உண்மையைச் சொல்லக் கூடாது, (வெளிப் படையாய்) இராசா கண்ணுலே பார்த்தாலும்போதுமிங்க.

க:—இராசாவை இப்போ பார்க்கச் சரிப்படாது.

து:—உங்களைக் கும்பிடரேனுங்க;

கும்பிடுகிறான்.

க:—அந்தப் பசப்பெல்லாம் எனக்குத் தெரியும். பணத்தை நீங்க தபாச்சிக் கிட்டுப் போறேங்க; எனக்கென்னஆச்சு? எங்க வீட்டுக்கு என்ன ஆச்சு.

து:—ஆ!(வாயைப் பொத்தி) மறப்பேனுங்களா?

வஜ்ர தம்ஷ்ட்ரன் உள்ளேயிருந்துவெளியேவருகிறான் காவற்காரகண்டகன்மூலையில் பதுங்கி நடுங்குகிறான் தூர்தனைப்பார்த்து சொல்லாதே என்று கையைக் கசக்கி உள்ளே போவதற்கு ஜாடை காட்டுகிறான்

வ:—கண்டகா!

க:—சுவாமி!

வ:—ஏண்டா! செம்படவர்களெங்கே? ஏன் உள்ளே அழைத்துப் போகவில்லே?

க:—சுவாமி! கொஞ்சம்! கொஞ்சம்!! இதோ வாராங்க. (செம்படவர்களை நோக்கி) சீக்கிரம் போங்க, உள்ளே.

செம்படவர்கள் மீனைத் தூக்கிக் கொண்டு போகிறார்கள் வஜ்ரதம்ஷ்டிரன் மீனைப்பார்த்து வியப்படைகிறான் கண்டகன் செம்படவர்களைப்பின் தொடர்ந்து அவர்களில் ஒருவன் மேல்துணியையிழுத்து அண்ணே என்கிறான் மெதுவாய்

திரைமறைகிறது.

சம்பராசுரன், வஜ்ரதம்ஷ்டரான், தேனுகன்
பிரமுகர்கள் யாவரும் உட்கார்ந்
திருக்கிறார்கள்.

சே:—(மீனைக் கீழே யிறக்கி) சுவாமி கும்பிடரேனுங்க.

கும்பிடுகிறார்கள் எல்லாரும் ஆச
னத்தை விட்டெழுந்து மீனைப்பா
ர்த்து வியப் புறுகிறார்கள்

ச:—நண்ப! இவ்வளவு பெரிய மீனை நீ பார்த்திருக்கிறாயா?

வ:—பார்த்திருக்கிறேன்.

ச:—எப்பொழுது, எங்கே?

வ:—சற்று முந்தி, அரண்மனை வாசலில்,

எல்லாரும் சிரிக்கிறார்கள்

ச:—வெகு நன்று, இதைத் தவிர

வ:—இதைத் தவிரவா ஆ! இல்லை! இல்லை!

ச:—சரி எப்போதும் கேலிபேசுவது தான் உன் வழக்கம்.

வ:—என்னுயிர்த் தோழனாகிய தங்களிடத்தில் விளையாடாமல்நான் யாரிடம் விளையாடப் போகிறேன்.

ச:—சரி, இன்றைக்குப் போதும்;இவர்கள் இந்த மீனுக்காகக் கேட்பது என்ன?

வ:—ஏதேனும் பரிசு பெறுவதன் பொருட்டுக் கொண்டு வந்தார்கள் போலிருக்கிறது.

(செம்படவர்களைப் பார்த்து) அப்படித்தானே.

சே:—ஆ மாங்க;

ச:—மந்திரி! தேனுகா! இப்படிப்பட்டமீன் அகப்படுவதரிதல்லவா? இதைப் போல் நாம் இனிப் பார்க்கப் போவதில்லை. இது வரையில் பார்த்தது மில்லையல்லவா? இவர்கள் இதைப் பிடிக்க எவ்வளவு சிரமப் பட்டிருக்கவேண்டும். தவிர அருமையான தொன்றை நம்மிடங் கொணர்ந்த இவர்களுக்குத் தக்கபடி மரி

யாதைசெய்யவேண்டுவதும்நியாயம். ஆகையால்இவர்கள்விரும்பும் பொருளைக் கொடுத்துசந்தோஷப் படுத்தி அனுப்பு; இந்த மீனை இப்பொழுதே சமையலறைக்குக் கொண்டு போகட்டும்.

தே:—அப்படியே செய்கிறேன்.

மீனைச்சமையலறைக்குக்கொண்டு
போகிறார்கள் சபை கலைகிறது

மூன்றுமங்கம்.

முற்றிற்று.

## நான்காம் அங்கம்

### முதற் காட்சி

---

இடம்:—மாயாவதி மாளிகை

காலம்:—காலை

பாத்திரங்கள்:—மாயாவதி, அமுதவசனி, குழந்தை.

மாயாவதி தன் துயரத்தை நினைத்து
ஜகதீசனிடம் முறையிடுகிருள்.

விருத்தம்.

ஆதியே! அருட்பெருஞ் சோதியே யெனையீன்ற
அன்னையே யென்னை யாளும்
அப்பனே ஒப்பிலா ஈசனே மாசிலா
அன்பரக மேவி யவர்தம்
தீதிலா நெறியறிந் துய்யவருள் தெய்வமே
சின்மயா நந்த வடிவே
சிறியனே னறிகிலேன் செய்தபிழை யிதுவென்று
சிறிதுமது குறியா மலென்
மீதுதயை செய்திந்த சமயமே படுபாவி
வெய்யவசு ரேச னுயிரை
வீட்டிச் சவட்டிநம னுலகுக் கனுப்பிடல்
வேண்டுநீ யன்றெ னுன்றன்
போதடித் தொண்டுசெய் வேனுய்வ தரீதுன்
புகழினுக் கழகன் றுகாண்
போற்றுமடி யார்துயர் மாற்றிநல மூட்டியருள்
பூரண நந்த வொளியே

ஆ! ஜகதீசா! யான் என்ன செய்வேன். பாவி யசுரனைக் கொன்ருலல்லது நான் உய்வதற்கு வழியில்லை. அவனை எந்த

விதத்திலேனும் மாய்த்து எனக்குப் பிராணபிச்சை தரவேண்டும். அன்றேல் உன் புகழுக்குச் சிறிதும் அழகல்ல. எனக்கு உன் பாதாரவிந்தமே கதியல்லது வேறில்லை.

கண்களில் நீர் பெருக ஒருகன்னத்தில் கையை வைத்துக் கொண்டு நிற்கிறாள்

அமுதவசனிஇளங்குழந்தையுடன்
மாயாவதியிடம் வருகிறாள்.

அ:—அம்ம! வந்தனம்! வந்தனம்!!

[வந்தனம் செய்கிறாள்

மா:—யார் (தலை நிமிர்ந்து பார்க்கிறாள்)

அ:—அடியேன் அமுதவசனியம்மா

மா:—அமுதவசனி!(உடம்பு சிலிர்க்கிறது) ஏது இக்குழந்தை? எங்கு கொண்டு வந்தாய்?

அ:—அம்ம! இது மீன் வயிற்றிலிருந்து கிடைத்தது. தங்களிடம் சேர்ப்பிக்கக் கொண்டு வந்தேன்.

மா:—என்னே ஆச்சரியம்! இன்று காலையில் அரசன் ஏதோ ஒரு பெரிய மீனை விலைக்கு வாங்கினதாகக் கேள்விப்பட்டேன். அதன்வயிற்றிலிருந்தா கிடைத்தது?

அ:—(புன்சிரிப்புடன்) ஆம்! ஆம்!!

மா:—(தனக்குள்) என்ன அழகு! (வெளிப்படையாய்) அம்மா! உண்மையைக் கூறு. மீன்வயற்றிலா இக்குழந்தையிருந்தது? என்ன ஆச்சரியமடியிது. கேலிசெய்கிறாய் போலும்!

அ:—தங்களிடம் நான் என்றேனும் கேலி பேசுவதுண்டோ? உண்மையில் இது மீன்வயிற்றிலிருந்து தான் கிடைத்தது.

மா:—இதை ஏன் இங்கு கொண்டுவந்தாய்?

அ:—(சிரித்துக்கொண்டு) அம்ம!

விருத்தம்

கண்டனன் கமலக் கண்ணும் கண்கவர் வனப்புஞ் செய்ய
தொண்டையங் கனிநேர் வாயுந் துகளிலாப் பிறவு றுப்பும்
கொண்டவிக்குழந்தை கோலம் குறித்ததென் மனமப் போதே
ஒண்டொடீ! நின்பா லீய யுவந்தவ்வா றேகொணர்ந்தேன்

கமலம்போன்ற கண்களும் கண்ணைக்கவருப்படியான அழகும் செவந்த கொவ்வைக் கனிக்குநேரான வாயும் குற்றமற்ற அவயவங்களையுமுடைய இந்தக் குழந்தையின் அழகைக் கண்டேன்' கண்டதும் தங்களிடம் இக்குழந்தையைக் கொடுக்க விரும்பினேன். அவ்வாறே கொண்டுவந்தேனம்மணி.

மா:—(தனக்குள்) இதென்ன இவள் கூறுவது உண்மையோ பொய்யோ தெரியவில்லையே. ஒருவேளை அசுரன் தான் தனது மாயவித்தையால் நம்மை வஞ்சிக்க குழந்தை வடிவம் எடுத்திருப்பானோ? உண்மைபுலப்படவில்லையே. இதுவரையில் பார்த்திராத பேரெழில் அல்லவா இக்குழந்தைக்கு வாய்ந்திருக்கிறது. மானிடக்குழந்தையாகவும் இருக்கிறது. ஒருவேளை ஜகதீசன் திருவிளையாடலாக விருக்குமோ? அது யாதாயினுமாகுக.

இதனால் என்ன நேரிடினும் நேரிடுக. குழந்தையைப் பெற்றுக் கொள்வோம். நம்மனமோ இக்குழந்தையைக் கண்டதும் பேரானந்தத்தில் மூழ்கி கையில்வாங்கி முத்தமிடநாடுகிறது. வருவதை விலக்க நம்மாலாகாது. ஈசன் திருவடியை நம்பி இக்குழந்தையைப் பெற்றுக் கொள்வோம். (வெளிப்படையாய்) அம்மா! குழந்தையைக் கொடு.

அமுதவசனி குழந்தையைக் கொடுக்க மாயாவதி வாங்கி முத்தமிடுகிறாள் ஆசனத்தமர்கிறாள் மடியில் வைத்துக் கொள்கிறாள்

இக்குழந்தையை மீன் வயிற்றிலிருந்து எடுத்தவள் நீதானோ?

அ:—ஆம் நான்தான் எடுத்தேன்.

மா:—அப்பொழுது இன்னும் யாரேனும் உன் அருகிலிருந்தனரோ?

அ:—ஒருவருமில்லை. யாரேனுமிருந்தால் இக் குழந்தை தங்களிடம் வருவதேது? நானும் ஒரு மானுட மாதா லையால் இந்த மானுடக் குழந்தையைக் கண்டதும் இரக்கமுண்டாகித் தங்களிடம் கொண்டு வந்தேன். அசுரர்களில் யாரேனும் கண்டிருந்தால் இதன் கதி யாதாமோ? அது தங்கள் சித்த மறிந்ததே.

மா:—உன் புத்தி சாலித்தனத்திற்கு மெச்சுகிறேன். அசுரஸ்திரீ களோ, அல்லது அசுரர்களோ இக்குழந்தையைப் பார்த்திருப் பார்களாகில் இது தப்பாது. அவர்கள் மானுடரிடத்துக் கொண்டிருக்கும் பகைமையால் இதை அவசியம் கொன்று தின்று விடுவார்கள். நாம் படும்பாடு தெரியாதா? இருக்கட்டும். நீ இதை ஒருவருக்கும் சொல்லாதே. நீமட்டும் வந்துபோய்க் கொண்டிரு. நான் என் தாதியர்களுக்கு இதை யொருவருக்கும் வெளியிடாமலிருக்கும்படி தகுந்த ஏற்பாடு செய்து விடுகிறேன். தாதியர்கள் என் மீது இப்பொழுது கோபங் கொண்டிருக்கிறார்கள். ஆயினும் எனக்கு அவர்களைச் சரிப் படுத்துவதற்கொரு வழி யிருக்கிறது. என்னவெனில், அவர்கள் தங்கள் இறைவனாகிய சம்பராசுரனை மணக்கும்படி நயத்திலும் பயத்திலும் என்னை இம்சித்துக் கொண்டிருக்கிறார்கள். நான் அவர்களிச் சைப்படி அசுரனை இன்னும் நான்கு மாத காலம் கழிந்த பிறகு மணந்து கொள்வதாகக் கூறி, இக் குழந்தையைப் பற்றி வெளியிடாமலிருக்கத் தெரிவித்தேனாகில் அவர்கள் என் வார்த்தையை நம்பி, சும்மாயிருந்து விடுவார்கள். பிறகு ஜகதீசன் திருவருள்படி நடக்கட்டும். அம்மா! என்னமோ தெரியவில்லை. இக்குழந்தையைக் கண்டது முதல் தேகம் சிலிர்க்கின்றது. உள்ளத்திலானந்தம் தானாகவே பெருகுகிறது. ஆகையால் இதைச் சில நாளேனும் வளர்த்து இதன் மதலைச் சொல்லாகிய அமுதத்தைப் பானஞ்செய்தால் தான் என் உயிர் போகும். ஆகையால் நான் எந்த விதத்திலாவது இதை அசுரர்களுக்குத் தெரியாமல் வளர்த்து வருகிறேன். நீ ஒருவருக்கும் வெளியிடாதே. ஆ என் கண்ணே!

குழந்தையை முத்தமிடுகிறாள்,

அ:—அம்ம! தமது ஆணைப்படியே நடக்கிறேன். சிறிதுந் தவற மாட்டேன். நேரமாயிற்று; போய் வருகிறேன். வந்தனம்.

வந்தனம் செய்து போகக்காலெடுக்கிறாள்,

மா;—அம்மா! அமுதவசனி! நீ இந்த திவ்ய சுந்தர ரூப லாவண்ணிய முள்ள குழந்தையை என்னிடம் கொண்டுவந்துகொடுத்ததற்கு யான் என்ன பிரதியுபகாரம் செய்யப் போகிறேன். நானே சிறைப்பட்டிருக்கிறேன். அந்தோ! கஷ்டம்.

கண்ணில் நீர்ததும்புகிறது.

அ:—எனக்கு ஒன்றும் வேண்டாம். தங்கள் தயவிருந்தால் அதுவே போதுமானது.

மா:—அமுதவசனி; இந்தா! அப்படியல்ல; உன் புத்திசாலித் தனத்துக்கும் என் பால் நீ வைத்திருக்கும் அன்புக்கும் இக்குழந்தையிடம் நீ காட்டிய காருண்யத்திற்கும் எங்கும் நிறைந்த ஜகதீசன் தான் தக்க கைம்மாறு கொடுப்பவனேயன்றிஎன்னாலாவதொன்று மில்லை. ஆயினும்,

விருத்தம்

அழகுரு வெடுத்த தென்ன அவனியிற் போந்த விந்தக்
குழவியை யென்பா லன்பு கூர்ந்துவந் தளித்த மாதே!
நிழலுமிழ் தரளமாலை நேர்ந்தன னிக்கென் னுள்ளே!
எழும் பெரு மகிழ்ச்சி தாங்கா திதனைநீ யடைதி யம்மா!

மாதே! இந்தா இந்த முத்தாரம்! நீ இதைப் பெற்றுக்கொள் என் உள்ளத்தில் உண்டான மகிழ்ச்சி தாங்கா திதனையளிக்கின்றேன்-அம்மா நீ அவசியம் பெற்றுக்கொள்ளவேண்டும்.

அ:—

விருத்தம்

புல்லரா மசுரப் பாவி புரிந்திடப் பணித்த யேவல்
அல்லொடு பகலு மாற்றி அருந்துய ராழி வீழ்ந்தோர்
எல்லைகா ணுமை லேங்கும் ஏழைநா னணிதற் கேற்ற
தல்லவிம் மணிமுத் தாரம் ஆதலின் வேண்டே னம்மா!

அற்பனாகிய அசுரப்பாவி எதைச் செய்யக் கட்டளையிடுகிறானோ அந்த வேலையைச் செய்து கொண்டு துயரக்கடலில் வீழ்ந்து அதனின்றும் கரையேற ஓர் எல்லை காணமல் ஏங்கும் ஏழையாகிய யான் அணிந்து கொள்வதற்கேற்றதல் ல

இந்த முத்துமாலை. ஆகையால் எனக்கு வேண்டாம்- தங்கள் தயவிருந்தால் போதும். நேரமாயிற்று நான் போகிறேன்.

காலெடுத்து வைக்கிருள்

மா:—அமுதவசனி! நல்லகாலம்ம எப்போது வருமோ தெரிய வில்லை.நான் சொன்னதை மறவாதே. போய்வா.

அ:—அப்படியே தவறுமல் நடக்கிறேன். போய்வருகிறேன்

(போகிருள்)

மா:—(ஆசனத்திலிருந்து) குழந்தையை மடியில் வைத்துக்கொண்டு கண்ணே! என்கண்ணினுள் மணியே! என் கலிதீர்க்கவந்த செல்வமே!

என்று சொல்லிமகிழ்ந்து முத்தமிடுகிருள். முத்தமிட்டதும்—

ஆ! ஆ!! மோசம் போனேனே! இக்குழந்தையை நான் ஏன் வாங்கினேன். தாதியர்கள் என் வார்த்தைக்கிணங்காமல் அசுரனிடம் தெரிவித்து விட்டால், அந்தோ!(மௌனம்)

இனி யென்செய்வது? இனி இக்குழந்தை பிழைக்கப்போவதில்லை. (கண்ணில் நீர்ததும்புகிறது) அந்தோ! குழந்தையின் திவ்யசுந்தர ரூபத்தைக் கண்டல்லவா மயங்கிப் பின் வருங் கேட்டை நினையாமல் வாங்கிக்கொண்டேன். நாம் இக்குழந்தையைப் பெற்றுக் கொள்ளாவிடின் இக்குழந்தை இறப்பது திண்ணமெனினும் என்கைக்குவந்து பின்பேன் இறக்கவேண்டும். அடைக்கலம்புகுந்ததுபோலானஇக்குழந்தையின் கொலைக்கு நானல்லவா இப்பொழுது பாத்திரமாகிறேன். ஆ ஜகதீசா! இதுவும் ஒரு விளையாட்டா? இந்தக் குழந்தையைத் துறக்க எந்தப் பாவி நினைப்பாள்? இதை எப்படிக் காப்பாற்றுவேன்? தன்னை மணந்து கொள்ள நான் சம்மதிப்பேனுகில், அசுரன் இதனுயிரை என்வார்த்தைக்கிணங்கிக் காப்பாற்றக் கூடும். அந்தோ! அந்தப் பாவியசுரனை மானுடமாதாகிய யான் எப்படி மணந்துகொள்ள இசைவேன். ஜகதீசா! தர்மசங்கடத்திலல்லவா வந்து முடிந்தது அந்தோ! என்செய்வேன். ஆ! இந்தவிதிக்கா நான் ஆளாகவேண்டும்! கருணுகரா! ஆபத்பாந்தவா! அநாதரக்ஷகா!

விருத்தம்

எண்ணமுடி யாதபல கோடிபா வங்களோ
யாரிட்ட வெஞ்சாபமோ!
என்போன்ற மாதுக்கு முன்புநான் செய்ததீங்
கிதெனச் சொல்லலாமோ
தண்ணருள் புரிந்தவர்க் கின்னல்பல செய்ததோ
தந்தைதாய் சொற்றுறந்ததோ
தாமென் றிரந்தவர்க் கீயாத தோஷமோ
தஞ்சந் தவிர்த்ததீதோ
வண்ணமலர் கொண்டுநின் பூசைசெய் யாததோ
மலரடித் தொண்டர்கோப
வசத்ததோ புவிமீது மாதென வுதித்திந்த
வாதனைக் குள்ளாவதும்?
அண்ணலே யென்றழைத் தலறிநீ தஞ்சமென்
றடைந்தபின் பலவகை யென்னை
அணுகிபல துயர்புரித லழகாகுமோ வுனக்
கனாதி முதலான பொருளே.

துதித்துக் கொண்டிருக்கும்
போதே நாரதர் வருகிறார்.

நாரதர்பிரவேசம்.

மா:—(நாரதரைப் பார்த்து) இதுயார்? (குழந்தையை யெடுத்துக் கொண்டே ஆசனத்தை விட்டெழுந்து) ஓர் சன்னியாசிபோ லல்லவா காண்கிறார். அசுரன் தான் இவ்விதம் சன்னியாசி ரூபங் கொண்டு வருகின்றனனோ? சீதையை இராவணன் சன்னியாசி ரூபங்கொண்டு தானே வஞ்சித்தான். நான் தான் இவன் கையிலகப்பட்டு விட்டேனே;ஏன் இப்படி வஞ்சக உருவங் கொண்டு வரவேண்டும். காரணந்தெரியவில்லையே என்ன செய்வேன். (தேகம் நடுங்குகிறது) (தெளிந்து) இருக்கட்டும். நாம் ஜாக்கிரதையாகவே யிருப்போம்.ஜகதீசன் திருவடியே துணை ஈசா!

நெருங்கி விட்டார் நாரதர்

நா:—நாராயண! நாராயண!

மா:—(தனக்குள்) என்ன! இவர் கையில் வீணை யொன்றிருக்கின்றதே! நாரத மகா முனிவருக்கு வீணையுண்டென்று சொல்லக் கேள்விப் பட்டிருக்கிறேனே, அவர் தானோ? அந்தோ! இந்தப் பாவிக்கும் அந்தப் புண்ணியம் வாய்க்குமோ? சீ! யாரோ தெரியவில்லை. (மௌனம்)

"வருந்தியழைத் தாலும் வாராத வாரா
பொருந்துவன போமி னென்றாற் போகா"

ஆகையால்; இவரோ தவக்கோலத்துடன் வருகின்றனர். தவமதி சிறந்த ஞானியை வணங்க வேண்டியது எவ்விதத்திலும் ஞாயமே, ஜகதீசனைப் பணிவதிலும் அவருடைய அடியாரைப் பணிவது விசேஷம். பணிந்து நல்வரவு கூறுவோம். யாதுநேரிடினுஞ்சரி; (குழந்தையைத்தான் வீற்றிருந்த ஆசனத்தில்கிடத்திவிட்டு) (வெளிப்படையாய்) ஐயா! வந்தனம்.

வந்தனமளிக்கின்றாள்

இதோ இவ்வாசனத் தமர்ந்தருள்க.

ஆசனமளிக்கிறாள்

நா,—(கையமர்த்தி) பெண்ணே! நினக்கு மங்கள முண்டாகுக.

ஆசனத்தமர்கிறார்.

மா,—ஐயா! தாங்கள் யாரோ அறிகிலேன் பேதை.

நா;—என் பெயர் நாரதர் என்று கூறுவார்கள்.

மா;—மகா முனிவரே! அடியேன் மாயாவதி பல கோடி வந்தனம் செய்கின்றேன். முதலை வாய்ப்பட்டுத் தவித்த கஜேந்திரனைக் காக்க வந்த பரம தயாளு வாகிய விஷ்ணுவைப்போல் என் ஆபத்தறிந் தாதரிக்க வந்த தபோதனரே! அடைக்கலம் புகுந்தேனை யாதரிக்க வேண்டும். நானென்ன தெரிவிக்கப்போகிறேன். நடப்பது, நடக்கப் போவது, நடந்தது யாவும் அறியவல்ல பரம ஞானியாகிய தாங்கள் என்வரலாறும் யான் படுந்துன்பமும் அறியாததன்று. அடியேனையாண்டருள்புரிய வேண்டும்.

வந்தனம் செய்கிறாள்

நா:—மாயாவதி! வருந்தேல்; நின்றுயரம் ஒழியுங்காலம் சமீபித்து விட்டது.

மா:—(கையைக் கும்பிட்டுக் கொண்டு) மகா பெரியவரே! தங்கள் திருவாக்குக்கு அநேக கோடி வந்தனம். சுவாமி! ஒரு கணம் போவது ஒரு யுகமாக வல்லவா இருக்கின்றது. இனி யான் சகியேன். சீக்கிரமாக ஈசன் கருணையுண்டாகும்படி அருள் புரியவேண்டும்.

நா:—மாயாவதி! சிறிதும் வருந்தாதே. சீக்கிரத்தில் உன் துயரம் நீங்கும். சிவ! சிவ! (மௌனம்) அம்ம!

அகவல்

வருந்தேல் சிறிதும் வருந்தேல் சிறிதும்
வருந்தேல் மாயா வதி நீ சிறிதும்
ஒழிந்த துன்பாபம் கழிந்த துன்சாபம்
விட்டதுன் தீவினை பட்டதுன் கவலை
அச்சந் தவிர்தி அச்சந் தவிர்தி
நிச்சயஞ் சொன்னேன் அச்ச ந்தவிர்தி
நின்பகை களைந்து நின்சிறை மீட்கத்
துன்ப மொழித்துச் சுகமுனக் களிக்க
வந்தன னிந்தச் சந்திர நிகர்த்த
சுந்தர வதன சுகுண குமாரன்
சின்பால் மாதே; நீ மனஞ்சோரேல்
அன்பா யிவனை யளிப்பாய் நீயும்
யாரேயிவனென்றையுறேல் மாதே!
காரே யனையமேனியன் காணற்
கரியன் பெரியன் துவாரகைக் கதிபன்
பெருமை மைந்தன் பேர்பிரத் யும்னன்
இன்ன வனுயிர்த்ததும் இவனைத் தன்பகை
என்ன வறிந்த அசுரர்க் கிறையவன்
சின்னாள் முன்பு சென்றனன் துவாரகை
சென்றிச் சிறியனைத் திருடிப் போந்து
கடலி லெறிந்துதன் பகைதனைக் களைந்ததாய்த்

திடங்கொண்டு ள்ளான் தீநெறி யாளன்
வருவதை யாரே விலக்க வல்லார்
ஒருவரு மிலையென உலகோ ரறிய
ஈசன் கருணையாலிவனை யோர் மீன்
எடுத்து விழுங்கிய தடுத்த கணமே
வலைஞர் வலையில் மறு நாட் பொழுதே
வந்து புகுந்தது மாயவ னருளால்
மீனைவலைஞர் விற்றது முதலிவண்
மானே நடந்த வை யறிவாய் சொலவென்?

[முனிவர் சற்று மௌனம்

மா:—(தனக்குள்) ஆ! ஆ!! என்னே ஆச்சரியமிது! இக்குழந்தை என் பகை களைந்து என் சிறை மீட்க வந்த தாமே! துவார காதிபதியாகிய கிருஷ்ணனுடையபுத்திரன்பிரத்தியும்னனென்று கூறுகிறாரே இக்குழந்தையை! பாவியசுரன் இக்குழந்தையையா கடலில் எறிந்தான். விதியை யாரே விலக்கவல்லார் ஒருவராலும் முடியாது. இவனால் அசுரப் பாவிமடிய வேண்டுமென்பது ஈசன் கட்டளை போலும்! இன்னும் விவரம் கேட்போம் (வெளிப்படையாய்)

விருத்தம்

மாதவ முனியே யிந்த மகவென்று சிறைமீட் டென்னை
ஆதரித் திடுவதந்தோ யரைக்கணம் யுகமாய்க் கழியும்
போதிதை வளர்ப்ப தெங்கே புகலிடம் பெறுவ தெங்கே?
பாதக னசுரன் காணிற் படுவதிக் குழந்தை திண்ணம்.

மகாதவ சீலராகிய முனிவரே! இந்தக் குழந்தை எப்பொழுது என்னைச் சிறை மீட்டு ஆதரிக்கப் போகின்றது? நானோ அரை நிமிஷத்தை ஒரு யுகமாகக் கழித்துக் கொண்டிருக்கிறேன். இச்சமயத்தில் இதை எப்படி நான் வளர்ப்பேன்? வளர்த்து அடைக்கல ஸ்தானம் பெறுவதெங்கே? பாதகனாகிய அசுரன் காண்பானாகில், இக்குழந்தை இறப்பது நிச்சயம். ஆ! நான்என்னசெய்வேன்

கண்ணீர் விடுகிறாள்

நா:—

### அகவல்

மாதர்க்கரசே மாயா வதியே
தீதிலை சிறிதும் பாதகனசுரன்
படுவது திண்ணம் பகர்ந்தன னுண்மை
விடமெடுத் துண்ட விமலனார் நெற்றி
அழல் விழிக் கிலக்காய் ஆகம் குலைந்த
கொழுநனை நாடிக் கொடுந்தவம் புரிந்த
அதிசௌந் தரிய ரதி நீ மாயா
வதி நீ யந்த மதலைநின் னன்பன்
மதனனே! இனுமோர் மாதந்தன்னில்
மதலையும் பெரிய வாலிபனாக
வளர்ந்திடும் பின்பு மாய்த்திடுந்தீய
வசுரனையம்ம! நிசமிதுவாமே.

(முனிவர் மௌனம்) இப்போது மாயாவதி ஈசன் கருணையால் பூர்வ ஞானத்தை யடைந்து தான்முனிவர் கூறியபடி ரதியேயென்பதையும் மகவாகவந்திருப்பது தன்கொழுநன் என்பதையும் அறிந்து தன் வசமற்று முனிவரைத் துதிக்கிறாள்.

### விருத்தம்

ஐயனே! போற்றி ஞான வானந்த வுருவே போற்றி
வெய்யதீ வினை யறுத்த விமலனே போற்றி யேழை
உய்யுமா றென்முன் றோன்றி ஒப்பிலாக் கருணைதந்த
மெய்யனே போற்றித் தெய்வ வேதனே போற்றி போற்றி

தவமதிச் செல்வ போற்றிச் சகலமு மறிந்தோய் போற்றி
பவப்பிணி தொலைத்தோய் போற்றி பரமகா ருண்ய போற்றி
அவமதிச் சிறியேற் கின்று ஆருயிர் தந்தாய் போற்றி
புவனமீ ரேழும் போற்றும் புண்ணிய போற்றி போற்றி

முனிவரைநமஸ்கரிக்கிறாள்.

நா:—நாராயண! நாராயண !!

மாயாவதி:—

விருத்தம்

வினைப்பெரும் பகை களைந்த வித்தக வருள்வீ ரெவ்வா
றினுமொரு மாத மிங்கிவ் விளமக வோடி ருப்பேன்
தினையள விரக்க மில்லாத் தீயவ னெனைம ணப்பான்
தனியனு யென்மு னேகின் தப்புவ தெவனே வையா?

வினையாகிய பெரும்பகையைக் களைந்த ஞானவானே ! இன்னும் ஒருமாத காலம் வரையில்இந்த இளங்குழந்தை யோடிங்கெவ்வாறிருப்பேன். என்னைமணக்க வெண்ணங் கொண்டு, மனதிற் சிறிதும் இரக்கமில்லாத அசுரன் தனியாயிருக்கும் என்முன்புவரின் நான் தப்புவதெவ்வாறு? இதற்கு வழியாது இந்தக் குழந்தைகதி என்னும்! ஆ ஈசா!

மூர்ச்சிக்கிறாள்

நாரதர்:—

அகவல்

சந்திர நிகர்முகச் சுந்தர மாதே !
சிந்தையி லச்சஞ் சிறிதுங் கொள்ளேல்
அனாதி முதல்வ னுபத்பாந்தவன்
மனுதி கடந்த மாதவ னருளால்
மாரனு மிந்த மகவொரு வாலிபன்
ஆகு நாளளவும் தோகைநிற் கன்றி
யெவருங் காணுர் இவனுரு வமம்!
கவலை தவிர்தி கவலை தவிர்தி
நினைச்சிறைப் படுத்த நிசிசர னின்முன்
வந்திடும் போதுன் சுந்தரவதன
இளநகைகாட்டி இசைந்தன ளென வவன்
உளந்தனில் எண்ணம் உவந்துமே கொள்ளச்
செய்வாய் செய்தபின் சிலநாள் பொறுத்து
எய்துவ னினையென யிசைத்திடல்வேண்டும்
காரணம் யாதெனில், காரிகையே சொல்
தாரணி மார்பா ! தைரியதீரா !

மணந்துனை மருவ மறுத்ததின் மனதை
உணர்ந்திட வேயதை யுணர்ந்தன னெனினும்
எடுத்துள விருதமொன் றினுஞ்சில பொழுதில்
முடிந்திடும் பின்னர் கடிமணம் நேர்வன்
எனவுணர்த் திடிலவ னேகுவன் மகிழ்ந்து,
அனங்கனு மிவனும் அவனும் பின்னர்
அமர்நேர்ந் திடுவ ரதில்வல் லசுரன்
தமரொடு சாவது சத்தியம் மாதே !
பின்னர் நின்னொடு பெருமாள் வைகும்
நன்னகர்த் துவாரகை நாடிச்சென்று
கண்ணன் முன்புனைக் கடிமணஞ் செய்து
வாழ்வன் மாதே! தாழ்வுனக் கினியிலை
சத்திய மிதுவெனச் சாற்றினன்; வந்து
மெத்தப்பொழுது சென்றன வீணே
ஆகையி னேகுவன் றோகைநீ சோரேல்
மேகநிறக் குழல் மெல்லியல்! சோரேல்!

முனிவர்போகிறார்

மா:—(குழந்தையையெடுக்கப்போகிறாள்-- முனிவர்மீண்டும்வந்து,)

அகவல்

நா:—மாதே யினுமொன் றுரைக்க மறந்தேன்
யாதெனில் தீய அசுரன் மாயா
வித்தை பயின்றவன் மெத்தச் சமர்த்தன்
ஆதலின் மந்திர மோது வனென்று
அதைநீ கேட்டுணர்ந் தமர்நேர் சமயம்
மதனனு மிந்த மகவுக் கோதுக
பின்பிங் கெவையும் பிழைபடா தியானும்
சென்றுபின் வருவன்'றெரிவை யரசே!

முனிவர் போகிறார் மாயாவதியும்
ஈசனைத்தியானஞ் செய்துகொண்டு
ஆசனத்தமர்கிறாள்,

---

# நான்காவது அங்கம்

## இரண்டாங்காட்சி

———

இடம்:—மாயாவதியின் மாளிகையின் ஓர்புறம்.

காலம்:—பகல்.

பாத்திரங்கள்:—மாயாவதி, அமுதவசனி, குழந்தை

மாயாவதி தனித்திருந்து குழந்தையுடன் விளையாடுகிறாள்

அமுதவசனி பிரவேசிக்கிறாள்.

அ:—அம்மா! வந்தனம் செய்கின்றேன்.

மா:—அம்மா! வா! இதோ இந்த ஆசனத்துட்காரு;

அ:—(ஆசனத்தமர்ந்து) குழந்தை யெங்கே காணோம். சௌக்கியமா யிருக்கின்றதா?

மா:—(நகைத்து) அம்மா! இதோ பார் இங்கிருக்கின்றதே. உனக்குத் தெரியவில்லையா?

அ:—அம்மா! எங்கிருக்கின்றது?

மா:—(சிரித்து) (தனக்குள்) மஹரிஷி சொன்னது சரிதான். தாதியர்களும் கண்டுகொள்ளவில்லை. இவளுக்கும் தெரியவில்லை. மகரிஷி உபதேசித்த மந்திர முச்சரித்து இவளுக்கு மட்டும் காட்டுவோம். (வெளிப்படையாய்) அம்மா தெரியவில்லையா? இதோபார்.

சற்று மௌனம் குழந்தை படுத்தவண்ணத்தில் விளையாடுகிறது.

அ:—(பார்த்து ஆனந்தமடைந்து) என் தங்கமே! என் கண்ணே இங்குவா!

எடுத்து முத்தமிடுகிறாள்.

அம்மா! சற்றுமுன்பு இக்குழந்தை என் கண்ணுக்குத் தென்பட வில்லையே. இப்பொழுது எப்படி இங்குவந்தது?

மா:—அம்மா! அமுதவசனி! நீ என்னிடம் இக்குழந்தையைக் கொடுத்துவிட்டுப் போனதும் இதை இந்தப்பாவிகளாகிய அசுரர்

களுக்குத் தெரியாமல் வளர்ப்பதெப்படி யென்கிற பெருங் கவலைக்குள் மூழ்கி யிருந்தேன். அப்பொழுது மண்டல முழுதும் புகழ்ந்து கொண்டாடும் நாரதமகாமுனிவர் இங்குவந்து இக்குழந்தை யின்னாரென்பதைக் கூறி, "இதனால் உனக்கு க்ஷேம முண்டாகு" மெனவும் கூறினர்

நான்முனிவரைப்பார்த்து "ஐயா! இக்குழந்தையைஎப்படி வளர்ப்பது; வளர்த்து வாலிபனான பிறகல்லவா என்னைக் காப்பாற்றப் போகிறது இக் குழந்தை. அதற்குள் நான் தப்புவதெங்கே. இக்குழந்தைதான் தப்புவதெப்படி? என்று கேட்டேன். அவர் "மாதே! நீ யஞ்சாதே! உன்னைத்தவிர ஒருவர் கண்ணுக்கும் இக்குழந்தை தென்படாது. நீ யார் கண்ணுக்குத் தெரியவேண்டுமென்று விரும்பி மந்திரத்தை ஜபிக்கிறாயோ; அவர் கண்ணுக்கு மட்டும் குழந்தையின் உருவம் புலப்படும்; இன்னும் ஒரு மாதத்திற்குள் குழந்தை வாலிபனாய்விடும். பிறகு க்ஷேமமுண்டாகும் எனவுங்கூறிச் சென்றனர். அதனால் தான் முதலில் இக்குழந்தை உனக்குத் தென்படவில்லை. அம்மா! அமுதவசனி! நீதான்! எனக்குத் தாய்; சுற்றம், தெய்வம் யாவும். நீ என்னிடம் இக்குழந்தையைக் கொண்டுவந்து கொடுக்காவிட்டால் நான் தப்புவதேது?

அ:—எல்லாம் ஈசன்செயல். யாவும் அவனிச்சைப்படி நடக்குமே தவிர என்னாலும் தங்களாலும் இன்னொருவராலும் ஆவதொன்றுமில்லை. ஈசன் திருவருளை அறிவார் யார்? அம்மா! இக்குழந்தைப் பற்றித்தெரிவித்ததென்ன?

மா:—அது பரம இரகசியம். இப்பொழுது அதைத் தெரிவிக்கலாகாது. இதற்காக நீ என்னை மன்னிக்கவேண்டும். கூடிய சீக்கிரம் உனக்கே தெரியவரும்.

அ:—தங்களிஷ்டப்படி செய்யவும். அடிமையாகிய ஏழை நான் என்ன சொல்லப்போகிறேன். தாங்கள்என்னை மறக்கலாகாது. வந்து நேரமாயிற்று. போகிறேன்

மா:—சரி, போய்வா. இன்றைக்கு அசுரப்பாவி வருவதாகவும் கூறியிருக்கிறான். இங்கு வரமாட்டான். உபவனத்திற்கு வருவான்.

அவன் வந்ததும் தாதிகள் என்னை யழைப்பார்கள். எதற்கும் நீ போ. பிறகு பேசிக்கொள்வோம்.

நேபத்தியத் திற்குள் மாயாவதி! மாயாவதி! எனக் கூப்பிடும் சத்த முண்டாகிறது.

தாதிகள் என்னைக் கூப்பிடு கிறார்கள். நான் போகவேண்டும். நீ போ அசுரன் வந்துவிட்டாப் போலிருக்கிறது.

அ:-அம்மா! இன்று அசுரனுக்குத் தாங்கள் என்ன பதிலளிக்கப் போகிறீர்கள்?

மா:-நாரத மகாமுனிவர் அதற்கு உபாயம் ஒன்று சொல்லிக்கொடுத்திருக்கிறார். அதன்படி செய்து தப்பித்துக் கொள்வேன். இந்த யுக்தியை நாளை நீ வரும்போது உனக்குக் கூறுகிறேன்.

அ:-சரி, நான் போகிறேன்.........குழந்தை.

மா.-இங்கேயே இருக்கட்டும். பயமில்லை. ஒருவருக்கும் இது தென்படாது. குரலுங்காட்டாது. தீங்கு ஒன்றும் நேரிடாது. அப்படித்தானே நடந்து வருகிறது சென்ற சில தினமாக.

அ.-அதெப்படி?

மா:-ஆண்டவன் ஆக்கினை அப்படி; நீ சஞ்சலப்படாதே போ. நான் போகிறேன்.

குழந்தையை விட்டுவிட்டு மாயாவதி போகிறாள். அமுதவசனியும் ஆச்சரிய மடைந்து திரும்புகிறாள்.

## நான்காவ தங்கம்

### மூன்றாவது காட்சி.

---

இடம்:—உபவனம்.

காலம்—மாலை

பாத்திரங்கள்:—சம்பாசுரன், மாயாவதி சுமதி, தாதிகள

சம்பராசுரன் ஓர் அடர்ந்த மரத்தடியில் உள்ள சலவைக் கல்லில் உட்கார்ந் திருக்கிறான். தாதிகள் விசிறி கொண்டு விசிறி உபசரிக் கிறார்கள்.

ச:—(தாதிகளைப் பார்த்ததும்) மாயாவதி இங்கு வந்ததும் நான் இந்த மல்லிகைச் செடிக்குப் பின் மறைந்து கொள்கிறேன். அப்பொழுது என் மனக் கருத்தைப் பற்றித் அவளுக்கு தெரிவியுங்கள்.

தா:—ஆகா! அப்படியே! அதோ மாயாவதி வருகின்றாள்.

ச:—வந்து விட்டாளா எங்கே! எங்கே!!

சுற்று முற்றும் பார்க்கிறான்.

ஆம்! ஆம்!! வருகிறாள். நான் போகிறேன்.

எழுந்து மல்லிகைச் செடியண்டை மறைந்து கொள்கிறான்

மாயாவதி பிரவேசிக்கிறாள்.

சு:—அம்மா! வா! இதோ பார் இனிமையான பழம் பறித்து வைத் திருக்கிறோம். பல வகைப் புஷ்பங்களும் சேகரித்து வைக்கப் பட்டிருக்கின்றன. நீ இங்கு உட்கார்ந்து உனக்கு வேண்டிய கனிகளைப் புசித்து புஷ்பங்களையும் எடுத்துக் கொள்.

மா:—இருக்கட்டும்; என்னை ஏன் அழைத்தீர்கள்?

சு:—கனிகளையுண்டு இந்த உபவனத்தில் சந்தோஷமாய்ப் பேசிக் கொண்டிருக்கும் பொருட்டே.

மா:—எனக்குஇப்போது இவைகளொன்றிலும்பிரியமில்லை; விளையாடவும் மனம் நாடவில்லை. கொஞ்சம் குளிர்ந்த தண்ணீர் கொடுத்தால் போதும்.

சு:—சரி; அதற்காகட்டும் உட்கார்ந்து தானே யாகவேண்டும்.

மாயாவதி உட்காருகிறாள் ஒரு தாதி ஜலம் கொண்டு வந்து கொடுக்கிறாள் அதை வாங்கி மாயாவதி குடிக்கிறாள்,

சு:—அம்மா! மாயாவதி; ஒரே மூரட்டுத்தனமாயிருக்கிறாயே. முரட்டுத்தனம் கூடாது. எங்கள் பிரபுவை மணந்து கொள்வதில் நீ யேன் தடை செய்கிறாய். நீ எங்களுக்கு அரசியானால். எவ்வளவு சந்தோஷமாயிருக்கும். நீ மன்னனை மணந்து கொள்வதில் உனக்கு ஒரு குறைவும் வராது.

மா:—(தனக்குள்) இச்சமயம் இவர்களுக்கு இணங்கினது போற் பாசாங்கு செய்ய வேண்டும். (வெளிப்படையாய்) (புன்சிரிப்போடு) அம்மா! நான் மன்னனைத் தடையில்லாமல் மணந்து கொள்கிறேன். நீங்கள் கவலைப்பட வேண்டாம்.

சம்பராசுரன் சரி சரி யென்று தலையை அசைக்கிறான் காலையெடுத்து வைக்க முந்துகிறான் பின்பு நிற்கிறான் தாதியர்களும் சந்தோஷிக்கிறார்கள்,

சு:—மாயாவதி! நேற்றெல்லாம் ஏன் மறுத்தாய்.

மா:—மன்னன் மனதைப் பரிசோதிக்கவே.

சு:—இப்போது தடையில்லையே.

மா:—தடையில்லை......ஆனால்.

சம்பராசுரன் பிரவேசிக்கிறான்.

ச:—இனி யேதுந் தடையில்லையே! கண்மணி! உனக்குவந்தனமளிக்கின்றேன். எங்கே என் கையைப் பிடித்துக் கட்டியணைத்து ஒரு முத்தங் கொடு பார்ப்போம்

சம்பராசுரன் மாயாவதியிடம் செல்கிறான் மாயாவதி பயந்து ஒரு பக்கமாக ஒதுங்குகிறாள்

மா;—(மனதில் திடங்கொண்டு நாரதர் கூறியதை நினைத்து)

அகவல்

மன்னு வுனையே மணக்கத் துணிந்தேன்
சின்னாட் பொறுத்திச் சிறியனேன் கைபிடித்
திடலே கடனும் ஏனெனி லேழை
எடுத்துள விருத முடித்திடல் வேண்டும்

ச:—எப்பொழுது முடிவ தியம்புதி கண்ணே!

மா:—முப்பது நாளில் முடிவது திண்ணம்.

ச:—அப்படியாயின் எப்படிப் பொறுப்பேன்?

மா:—ஒப்பிய தன்றி யுன்னிடமுள்ளேன்
இனியேன் கவலை யேந்தலே! பொறுப்பாய்
தனியேன் மறவேன் சற்று நீ பொறுப்பாய்

ச:—கண்மணீ! நீ கூறியபடியே நான் பொறுத்துக்கொண்டிருக்கத் துணிந்தேன். இந்த முப்பது நாளையும் முப்பது யுகமாகத்தான் நான் கழிக்கவேண்டும். பெண்ணரசே! உன்னை அடிக்கடி வந்து கண்ணாலேனும் பார்த்துவிட்டுப் போகலா மல்லவா?

மா:—பார்த்துப் போகலாம். போகக்கூடா தென்பதில்லை. ஆனால் என்னோடுவார்த்தையாடல் மட்டும் கூடாது. ஏனெனில் அரசே! மனம் பொல்லாது. பிறகு என் விருதத்திற் பங்கம் உண்டாகும். என் ஐயனே! மன்னிக்க வேண்டும்.

ச:—(அடங்காமகிழ்ச்சி கொள்கிறான்) ஆகா! அப்படியே! செய்கிறேன். போய் வருகிறேன்.

போகிறான்

தாதிகள் பிரவேசிக்கிறார்கள்

தா:—அம்மா! நீங்களும் க்ஷேமமடைந்தீர்கள். நாங்களும் க்ஷேமமடைந்தோம். தங்களுக்கு வேண்டி கனிவர்க்கங்களையும் புஷ்பங்களையு மெடுத்துக்கொள்ளுங்கள்; இன்னும் என்ன வேண்டும்?

மா:—எனக்கு ஒன்றும் வேண்டாம். வீட்டுக்குப்போகவேண்டும்.

தா:—போகலாம்.

எல்லோரும் போகிறார்கள்

நான்காவதங்கம்

முற்றிற்று.

# ஐந்தாம் அங்கம்

## முதற்காட்சி

இடம்—மாயாவதியின் மாளிகையின் முன்பக்கம்

காலம்—முன் இரவு

பாத்திரங்கள்—மாயாவதி, பிரத்யும்னன்.

தனியேயிருந்து மாயாவதி
யோசிக்கிருள்.

மா—ஓகோ! இன்றைக்கு நாரத மகாமுனிவர் வந்து போய் அநேகமாய் ஒருமாதகால மாகப் போகிறதே. இன்னும் குழந்தை குழந்தையாகவே யிருக்கிறதே. ஆ ஜகதீசா! நான் எவ்விதமுய்வேன். எவ்விதம் அசுரப்பாவி யிடமிருந்து தப்புவேன். அந்தோ! என்செய்வேன். மகாபாவியாகிய என்கவலை யொழியக் காலம் வரவில்லைபோலும். ஆபத் பாந்தவா, ஈசா! நாராயணு! எந்நேரம் இங்கிருந்தே தங்குவேன். உள்ளேபோய்ப் படுத்துக்கொள்கிறேன்; மணி ஒன்பதாகப்போகிறதே.

உள்ளே போகிருள்

திரை மறைகிறது.

மாளிகையிலுள்ள மாயாவதியின்சயன அறையில் ஈசன்
கருணையால் குழந்தையாயிருந்த பிரத்யும்னன்
வாலிபனுகி உலாத்துகிறுன். அவனை மாயாவதி
வாயிற்படியண்டை போகும்
போது பார்த்துமகிழ்கிருள்

மா—ஆ! ஆ! ஈசனது கருணையேகருணை! எனதாருயிர் நாயகனல்லவா வந்திருக்கிறுர். ஆ! ஆ!! என்ன அழகு இவரது முககமலத்திற்கு இந்த மூவுலகத்திலும் ஈடுண்டோ? மதயானைபோலல்லவா நடந்து வருகிறுர். இவரது அழகுக்கேற்ற அழகுடையவளா நான். இந்தப் பேய்க்கோலத்தோடுநானெப்படி இவரிடம் செல்வேன். செய்! வெட்கம்!! என்னை இலட்சியம்

செய்வாரா ! இந்த மகான். நான் அநேகநாளாக அசுரப்பாவி யிடமிருந்தேனே? ஏற்றுக்கொள்வாரா? என் இவரென்ன ஒன்று மறியாதவரா ? நான் இவ்வளவு நாள் இங்கிருப்பினும் பதி விருதாதருமத்தில் சிறிதும் தவறிநடந்திருப்பேனு? தடையில் லாமல் ஏற்றுக்கொள்வார். ஆகா! இந்த சுந்தரரூபம் சொர்க்க மத்திய பாதாளமென்கிற மூவுலகத்திலும்பார்க்கத்தக்கதோ! மகாலக்ஷிமியின் புத்திரனல்லவா இந்த மகான். இல்லாவிட் டால் இந்த அழகும் இந்த காம்பீரியமும் இந்தப் பார்வை யும் எப்படியமையும் என்நாதா ! என் கண்மணியே! உன்னை யானடைய என் வம்சத்தில் யார்செய்த தவமோ அறிகி லேனே. என்ன பாக்கியமிது. உள்ளே போகிறேன்.

போகிறுள்

பி:—அம்மா ! வாருங்கள்; புத்திரன் வந்தனம் செய்கின்றேன்.

வந்தனம் செய்கிறுன்

மா:—(வேறொருபக்கந்திரும்பிக் கொண்டு) செய்! சிவ! சிவ? சிவ! கிருஷ்ணா! கிருஷ்ண;!

செவியைப்பொத்திக்கொள்கிறுள்

பி:—அம்மா ! ஏன் யான்செய்த அபராதமென்ன? என்வார்த்தை கர்ணகடூரமாக விருப்பதன் காரணமென்ன? அம்மா ! அறியா மல் ஏதேனும் செய்திருந்தால் மன்னிக்கவேண்டும். நமஸ் கரிக்கிறேன்.

வந்தனம் செய்கிறுன்

(திரும்பிய வண்ணத்திலேயேதனக்குள்)ஏனோ இப்படிப்பேசு கின்றார். இது நாள்வரையில் தான் குழந்தை. தக்க வயதுடைய வாலிபனுயுமென்ன (வெளிப்படையாய்)பிராண நாதா! தங்கள் பேரில்எனக்குக்கோபமொன்றுமில்லை. தாங்கள் எனக்கு ஒரு குற்றமும்செய்யவில்லை! தங்களுக்கு அடியாளாகிய என்னை அம்மா!வென்று அழைத்து வந்தனம்செய்கின்றீர்களே! தகுமா இவ்வார்த்தை?என் செவிக்கினிக்குமா?

பி— இராகம்—கமாசு

பல்லவி

பிள்ளை நா னல்லவோ அம்மா! நீவளர்த்த
பிள்ளைநா னல்லவோ அம்மா !

அ-வி

பிள்ளையை பணுளனென்று பிரியமா யழைத்திட
உள்ளந்துணிந்ததேனே உனக்கிது நீதிதானே-பிள்ளை

சரணம்

இந்தமதி வாலாகுமோ—அம்மம்மா !
இது கொடும்பாவமன்றோ.
விந்தையினும் விந்தையிது மேதினியி லன்றிவிண்ணும்
மேவுபெரும் நிந்தையிது வெம்பவத்து வித்துமிது—பிள்ளை.

மார்சழி பூாதம் திருவாதிரை நாள் வரப்போகுது என்ற
நந்தன் சரித்திர மெட்டு

கண்ணிகள்

மா—என்மகநீயல்ல; ஈன்ற தாய் நானல்ல; என்னுயிர்நாதனீயே;
ஏனோநின் மனம் எனைமறைந்ததிதென்விதியோ வையோ

பி—அந்தோ! அந்தோ ! அந்தோ!! யிதென் அனியாயமம்மா
ஆகா இப்மொழி கொடிதிதினியிங் கரைக்கணம் நானில்லேன்

மா—(தனக்குள்) இன்னும் என்னை இவர் இன்னாரென்று தெரிந்து கொள்ளவில்லை. நாமே தெரிவிப்போம். இப்பொழுதேனும் அறிந்து கொள்கிறாரா பார்ப்போம்.

நாதா இதுவுமோர் வாதா நீயென் நாயகன் மன்மதனே
நானுன்மனைவியாம் ரதியேசொன்னேன்நம்புவீரிம்மொழியே

மாயாதி அருகே செல்லுகிறாள்

பிர:—(விலகி நின்று) தூரநில், (மௌனம்) ஆ ! ஆ!! ஈசா! அம்மா! தங்களுக்குப் புத்தி மாறிவிட்டதா! காமத்துக்குக் கண் தெரியாதென்றுசொல்வார்களே! அது தங்களிடத்தில் பலித்து விட்டாப்போ லிருக்கிறது. என்ன அம்மா ! இப்படி உளறுகிறீர்கள். என்னை மன்மத னென்கிறீர்கள் ? தங்களை ரதி யென்கிறீர்கள், இதென்ன புதுமை இது !

மா:—எனக்குப் புத்தியொன்றும் மாறவில்லை. தாங்கள் இங்கு என்னிடத்திற் குழந்தையாக விருந்து வளர்ந்து வந்தது உண்மையாயினும் நீர் எனக்கு மணவாளன்தான்.

பிரத்யும்னன் காதில் கை வைத்துக் கொள்கிறான்

அதிற் சந்தேகமில்லை. எனக்கு மணவாளனான நீர் இங்கு குழந்தையாக வந்தது இரகசியமான விஷயம். அதைப்பற்றிப் பேசி கிடைத்தற்கரிய இச் சமயத்தை வீணாக்களனக்குப் பிரியமில்லை. என் மடிமீதிருந்து ஒருமுத்தம் தருவீராயின் பிறகு அதைத் தெரிவிக்க என் மனம் இடங்கொடுக்கும். தாங்களே மாரனாகவிருந்தும் தங்களுடைய மனைவியாகிய என்னையும்பூங் கணைக்கிலக்காக்கி வருத்துகின்றமையால், இச்சமயம் தங்களுடைய திருவாய் அமுதமுண்டாலன்றி என் மனம் நிலை நிற்காது. நீர் இப்படிச் செய்வது நியாயமல்ல. மாரன் தன் மனைவியையும் விட்டானில்லையென்று உலகம் பழிக்கும். அந்தோ! தன்காடு பிறர்காடு என்பது கிடையாதா?

பிர:—அம்மா! ஏன் வாயில் வந்தவாறு உளறுகிறீர்கள். ஏதேனும் கனவு கண்டீர்களோ? இரகசியமாவது எழவாவது, என்ன ஆச்சரியமிது. நான் உங்களுக்குக் குமாரனா? மாரனா? ஏன் இப்படி வீண்வார்த்தையாடவேண்டும். இனி இப்படிப் பேசுவீர்களாயின் எனக்குக் கோபம் வரும்.

மா:—ஆ! நானென்ன செய்வேன். எனக்கார்கதி! கொண்டகணவனாகிய தாங்களேயிப்படிப் பேசினால் நானெங்கு போவேன்?

பி:—நீ எங்கும் போகவேண்டாம். நான் போகிறேன்.

போகிறான்

மா:—ஆ! நாதா! நாதா!

எதிர் நின்று தடுக்கிறாள்

பி:—(பிரமித்துப் போய் நின்று) அம்மா! நியாயமல்ல; சொன்னேன்; வேண்டாம்! வேண்டாம்!! இருவரும் நரகத்திற்கேக நேரிடும். ஒருமகன் தன் தாயைப் புணர்ந்தானெனில் அந்தோ! அதனினும் கேடு வேறுளதோ! (மௌனம்) ஆ ஈசா!

விருத்தம்

“செய்வகை யறியேன் மன்றுண்மாமணிநின்
திருவுளக் குறிப்பையுந் தெரியேன்
உய்வகை யறியே னுணர்விலே னந்தோ
வுறுகண்மே லுறுங்கொலென் றலைந்தேன்
மெய்வகை யுடையேன் வேறெவர்க்குறைப்பேன்
வினையனே னென்செயவிரைகேன்
பொய்வகை யுடையனெங்கனம் புகுவேன்
புலையனேன் புகலறியேனே.

ஈசனைத்துதித்து மெய்மறந்து நிற்கி
றான்

மா:—நாதா! (கையைப் பிடிக்கிறாள்.)

பி:-செய்! தூரநில்; இதுவரையில் உன்னைத் தாயென்று நினைத்து மரியாதை தவறாமல் நல்வார்த்தை பேசிவந்தேன். கை குவித்துக் கும்பிட்டு அடாத செய்கை யெனத் தடுத்தேன். இனித் தாங்கேன். தூரப்போ(என்னைத் தடுக்காதே.

கையை உதறுகிறான்

மா:—ஆ! ஆ! இதென்ன விபரீதம் நாதா!

பி—சிவ! சிவ!! அடிபாதகி!

இ-ம்-பைரவி-

ஆருக்குப் பொன்னம பலம்கிருபை என்ற
நந்தன் சரித்திர மெட்டு

பல்லவி

பெற்றநின் பிள்ளையைப் பிராணநாதாவென்று
பேசவாய் கூசாததேன்?

அ-வி.

பாதகி காதகி பாவி பழிகாரி
பாராதே யென்முகம் மீறாதே யென்பேச்சு-பெற்ற

சரணம்

அறிவில்லாப் பேயே நீ யப்பாலே போய்நில்லு
ஐயோ புத்திசொல்வார் யாருனக்குச் சொல்லு

அடுக்காது தடுக்காதே கெடுக்காதே பிள்ளையை-பெற்ற

மா:—ஐயோ! இனி நான் என்ன செய்குவேன்! நாதா! இப்படிச் சொல்லலாகாது.

பி:—செய்! தூரப்போ.

நடுங்கி விலகுகிறாள்

மா:-(தனக்குள்) இதென்ன விபரீதமாகக் காண்கிறது. (மௌனம்) செய்! என்ன மதியீனம். மறந்தே போனேனே. நாரத மகா முனிவர் கூறிப்போன மந்திரத்தை ஜபிக்காமல் இதுவரையில் வீண்வாதமல்லவா புரிந்தேன். பாழும் மோகமல்லவா நம்மை மயக்கி விட்டது. இதோ ஜபிக்கிறேன்.

ஜபிப்பதுபோல் பாவனைசெய்கிறாள்

பி:--(பூர்வஞான மடைந்து) ஆ! ஆ!! பிராணநாயகி! பிராணநாயகி!! (ஓடிவருகிறான்)

மா:-நாதா!

இருவரும் ஒருவரை யொருவர்தழுவி முத்த மிட்டுக் கொள்கிறார்கள்

## ஐந்தா மங்கம்.

### இரண்டாங் காட்சி.

---

இடம்:—மாயாவதி மாளிகைப்புரத்து உபவனம்.

காலம்:—காலை

பாத்திரங்கள்—மாயாவதி, பிரத்யும்னன், சம்பராசுரன், அசுரர்கள்

மா;—நாதா! அசுரன் இன்னும் ஒருமணி நேரத்திற் கெல்லாம் இங்கு வருவான். தாதி வந்து தெரிவித்தாள். அதனுல் தான் நான் தங்களை இங்கு அழைத்து வந்தேன். தாங்கள் எப்போதும் போல் ஒருவருடைய கண்ணுக்கும் தென்படாமலே யிருங்கள். அவன் வந்து என்னுடன் வார்த்தை யாடி என்னை அணைய வருவான். அப்பொழுது தங்களுடைய திருவுருவங் காட்டிச் சங்கரிக்க வேண்டும்.

அவன் மகா மாயாவி. ஆகலால்அவனை ஒருவரும்வெல்ல முடியாது. அவனைத் தாங்கள் வெல்லுதற்கு ஓர் மந்திரம் நாரதர் கூறியிருக்கிறார். அதனைத் தெரிவிக்கிறேன். அதனைக் கேட்டு ஜபித்துவரின் அவன் தங்களால் முடிவடைவது திண்ணம்.

பி:—ஆகா! அவ்வளவு வல்லமை யுண்டா அவனுக்கு? பிராண நாயகி! நமது வரலாற்றைக் கேட்டதுமுதல் அதாவதுசென்ற மூன்று நாளாய் என் மனமும் கையும் பதருகிறதே. இந்தப் பட்டணத்தையும் பாவிஅசுரனையும் நீர் மூலமாக்கினலொழிய என் ஆத்திரமடங்காது. அந்தப் பாவி என்னெதிர்ப்பட்டும் தப்புவானு? பார்க்கிறேன் ஒரு கை:

மீசையை முறுக்கிப் புயத்
தைத் தட்டுகிறான்

நாயகி, நாரதருடைய கருணையைப் பார்த்தாயா? என் வரலாறுனக்குத் தெரிவித்து உன்னைத் தேற்றியதுமன்றி இவ்வசுரனை ஜயிக்க ஓர் மந்திரமும் கூறியிருக்கின்றனர். பார்த்த

னையா? சாதுக்களுக்கு எப்பொழுதும் நல்லெண்ணமும்தன்னை அடுத்தாருடைய இடுக்கண்களைந்து அவர்களுக்குச் சுகமளிப்பதுவும்தான் சுபாவம். என் கண்ணே! அந்த மந்திரம் தெரிவிக்க இதுதான் சமயம்.

மா:—நாதா! இதோ!

மந்திரம் காதோடு உபதேசிக்கிறாள், பிரத்யும்னன் கேட்டுச்சந்தோஷிக்கிறான்

மா:—நாதா! அதோ! அசுரன் வருகிறான்.

பி:—எங்கே! எங்கே!

மா:— பார்த்தீர்களா?

பி:—ஆம்! ஆம்! வரட்டும். நான் மறைகிறேன்.

உருவம் மறைகிறது,

## சம்பராசுரன் பிரவேசிக்கிறான்.

மா:—(ஒரு பக்கம் ஒதுங்கி நின்று) வரவேண்டும். வரவேண்டும் எல்லாவற்றிற்கும் காலம் வரவேண்டியதாயிருக்கிறது.

ச:—கண்மணீ! (புன்னகையுடன்) நீ சொல்வ துண்மையே.

நேபத்தியத்திற்குள் அடே பாபி! இதோ வந்தேன், என்ற சத்தமுண்டாகிறது சம்பராசுரன் திடுக்கிட்டு சுற்றுமுற்றும் பார்க்கிறான் மீண்டும் வந்தேன் இதோ மகாபாபிஎன்றுகேட்கிறது,

ச:—என்ன! என்ன!

பிரத்யும்னன்யுத்தவீரன் போல் உருக்கொண்டு பிரவேசிக்கிறான்.

பி:—அடே! பாவி! சண்டாளா! என்ன அடாத காரியம் செய்யத் துணிந்தாயடா!

ச:—(பார்த்து) ஆ!! ஆ!! யாரடாவன் நீ?

பி:—நீ யாரவண்டா கேட்கிறவன்?

ச:--என்னடா எதிர்த்துக் கேட்கிறாய். மூடா? எங்கேயடா வந்தாய்?

பி:--உன் தலையைக் கொண்டுபோக வந்த இயமன் நான்.

ச:--நீயா இயமன். ஓகோ! ஓகோ!

பெருத்த சப்தமிடுகிறான் தாதிகளும் அசுரர்களும் ஓடிவருகிறார்கள்

ச:--(சிலரை நோக்கி) இவனைப் பிடியுங்கள் பிடியுங்கள்.

பிரத்யும்னனைப் பிடிக்கஓடுகிறார்கள் பிரத்யும்னன் அருகே வருகிறவர்களை சின்னா பின்னப்படுத்துகிறான் மீண்டும் அசுரர்கள் வந்துகொண்டேயிருக்கிறார்கள் வரவரக்கொன்றுகொண்டே இருக்கிறான் பிரத்யும்னன்

ச:—(இடசாரி வலசாரியாகப் போந்து) அடேய்' அடேய்!

அருகே போகிறான்

பி:--(இடசாரி வலசாரியாகப் போந்து) சிரித்துக்கொண்டே வா! வா! வா!

ச:—வந்தேன். நீயா யெனக்கு யமன்!

ஓங்கிக்குத்தப்போகிறான்

பி:—(தடுத்து) ஆமண்டா! பாவி!

குத்துகிறான் சம்பராசுரன் எதிர்த்துக் குத்துகிறான் பிரத்யும்னன் மாயாவதி

ஆ! ஆ!! ஜகதீசா! ஜகதீசா என்கிறாள்

ச:—நீ யாரடா! உண்மையைச் சொல். இல்லாவிட்டால் உயிரிழப்பாய்

பி:—அடேய்! உனக்கு யமனாகத் தோன்றிய பிரத்யும்னன்.

ச:—(பிரமித்து நின்று) நீ எப்படியடா வந்தாய். நீ குழந்தையாயிருந்தபொழுது உன்னைக் கடலிலெறிந்து கொன்றேனே.

பல்லைக்கடித்து மீசையை முறுக்கி புயத்தைத் தட்டுகிறான்

பி:—உனக்கு யமனாகத் தோன்றிய எனக்கு, நீ எப்படி யமனாவாய் மூடா?

ச:—அடேய்! என்ன வார்த்தையடா சொல்லுகிறாய் கொஞ்சமும் அஞ்சாமல்?

மாயாவதியின் பக்கம் திரும்புகிறான். அவள் பிரத்யும்னனிடம் ஓடுகிறாள். பிரத்யுமனன் அவளை மறைத்துக்கொள்கிறான்

ச:—அடேய்! உன்னைக் கொல்கிறேன். இதோ பார்!

ஓடிப் பிடிக்கிறான்.

பி:—தடுத்து செய்! தூர நில் மூடா!

குத்துகிறான், சம்பராசுரன் திரும்பிக் குத்துகிறான். இருவரும் ஒருவரை யொருவர் வாரி யெறிகிறார்கள். மாயாவதி கதறுகிறாள். பிரத்யும்னன் அவன் மார்பில் ஒரே குத்தாகக்குத்துகிறான்,

ச:—ஆ! ஆ!! ஆ!!!

அலறிக் கீழே விழுகிறான். மற்றவர்கள் ஓடிவருகிறார்கள். பிரத்யும்னன் எல்லாரையும் அதமாக்குகிறான்

மா:—நாதா! நாதா!!

பிரத்திபும்னனைக் கட்டிக் கொள்கிறாள், இருவரும் அவ்விதமே ஆகாயத்திற் கிளம்பி உலக ரக்ஷகனை ஸ்தோத்திரம் செய்துகொண்டுசெல்கிறார்கள்.

தோத்திரம்

(முத்தி நெறியறியாத என்ற மெட்டு)

1 மாயவனே சரணமரை மலர்க்கண்ணா சரணம் பணிப்
பாயவனே சரண முண்மைப் பரம்பொருளே சரணம் தெய்வ
நாயகனே சரணந்தவ ஞானமுனி வோர்பாவும்
தூயவனே சரணந்திவ்ய சுந்தரனே சரணமரோ

2 வாரணம்வா வென்றழைக்க வந்தருள்செ யாயர்குல
நாரணனே சரண மெங்கள் நாயகனே சரணநிறை
பூரணனே சரணமன்பர் புகலிடமே சரணம் ஜகத்
காரணனே சரணங் கருணாகரனே சரணமரோ

---

## ஐந்தாமங்கம்.
### மூன்றாங் காட்சி

இடம்—துவாரகையில்கிருஷ்ணனது மாளிகையிலுள்ள அந்தப்புரம்.

காலம்—காலை

பாத்திரங்கள்:—பிரத்யும்னன், மாயாவதி, ஸ்திரீகள்' கிருஷ்ணன். ருக்மிணி, சத்யமாபமை, நாரதர், சேவகன்,

பிரத்யும்னனும் மாயாவதியும் மாளிகையின் முற்றத்தில் ஆகாயத்திலிருந்திறங்கிஸ்திரீரத்தினங்கள்நிறைந்த அந்தப்புரத்தில் பிரவேசிக்கிறார்கள்.

ஸ்திரீகள்;—(ஒருத்தி மற்றவர்களைப் பார்த்து) யார் பார்த்தீர்களா? பார்க்கிறார்கள்

மற்றவர்கள்;—கிருஷ்ணனைப் போலவே யிருக்கின்றானே இவன்! கிருஷ்ணன் தானோ?

எல்லாரும் கிருஷ்ணனென நினைத்து மறைந்து பார்க்கிறார்கள்

சத்தியபாமை சில தாதிகளோடு பிரவேசிக்கிறாள்.

சத்:—தாதியைப் பார்த்து யாரோ இவர்கள் தெரியவில்லையே! என்ன அழகு!என்ன் கம்பீரம்! என்னநடை! என்னபார்வை! இவர்கள் இருவரும் தம்பதியானதற்குச் செய்த தவம்யாதோ தெரியவில்லையே. அடியே! வந்து விட்டார்கள் ஆசனம் போடு.

தாதிகள் ஆசனமிடுகிறார்கள்

தா:—வாருங்கள், உட்காருங்கள்;

பிரத்யும்னனும் மாயாவதியும் சத்தியபாமைக்கு வந்தனஞ்செய்கிறார்கள்.

ஓர் புறமாகக் கிருஷ்ணனும் ருக்மிணியும்
முன் பிரத்யும்னனைக் கிருஷ்ணனென
நினைத்து மறைந்தவர்களும்
வருகிறார்கள்.

கிருஷ்ணன்.—பெண்ணே! இவர்கள் யார் பார்த்தனையா?

ருக்மிணி:—யார் இவர்கள்? இவர்களைக் கண்டதும் என் மனதில் ஆநந்தம் என்னை யறியாமலுண்டாகிறதே. வெகு சுந்தர ரூப முடையவர்களாக வல்லவா யிருக்கிறார்கள். (புன் சிரிப்புடன்) நாதா! இவர்கள் யார்? சத்தியபாமையிடம் நிற்கிறார்களே. அவளுக்குத் தெரிந்தவர்களோ? இருவரும் இளம் வயதினர் களாகவல்லவா இருக்கிறார்கள். வாலிபனுடைய முகம் காணா மற் போன நம் குழந்தை பிரத்யும்னனுடையது போலல்லவா இருக்கிறது அவன்தானோ இவன்.

கி:—(புன்னகைபூத்து)கண்மணீ! உலகத்தில் ஒருவரைப்போல் ஒரு வர் இருப்பதில்லையா? அதனால் அவன் தான் இவனென்று நிச்சயிப்பதெப்படி' கூட வொரு சுந்தர வனிதையுமல்லவா நிற்கின்றாள்! அவளை யாரென்பது?

ரு:—நாதா வாருங்கள் அருகே போய் விசாரிப்போம்,

கி:—இரு; போவோம். சத்தியபாமை என்னவோ அவர்களுடன் பேசிக் கொண்டிருக்கிறாளே தெரியவில்லையா?

ரு:—ஆம்! ஆம்! சற்றுப் பொறுப்போம்.

நேபத்தியத்திற்குள் வீணாகானமும்
பரமசிவ ஸ்தோத்திரமும்.

கேட்டு எல்லாரும் திடுக்கிடு
கிறார்கள்,

நாரதர் பிரவேசிக்கிறார்.

சத்:—முனிவர் பெருமானே! வரவேண்டும். வந்தனம் செய்கின் றேன்.

வந்தனம் செய்கிறாள் தாதி
கள் ஆசனம்போடுகிறார்கள்
நாரதர் ஆசனத்தமர்கிறார்,

பி:—மா:—தங்கள் அடிமை வந்தனம் செய்கின்றோம்.

வந்தனஞ் செய்கிறார்கள்.

ரு:—கிருஷ்ணனைப் பார்த்து பிராண நாதா! நாரதர் வந்திருக்கிறார் போக வேண்டாமா?

கி:—பெண்ணே! இங்கேயே யிரு என்ன நடக்கிறது பார்ப்போம்.

நா:—(சத்யபாமையைப் பார்த்து) அம்மா இவர்கள் யார் தெரிந்து கொண்டீர்களா?

சத்:—தெரியவில்லையே இப்பொழுது தான் இங்கு வந்தார்கள்.

நா:—ருக்மிணி யம்மாளும் கிருஷ்ண மூர்த்தியும். எங்கே?

ருக்மிணியும் கிருஷ்ணனும் மறைகிறார்கள்.

சத்:—(தாதியைப் பார்த்து) முனிவர் வந்திருப்பதாகத் தெரிவித்து அவர்களை யழைத்துவா?

தாதி போகிறாள்.

உடனே அழைக்கச்சென்ற தாதியோடு ருக்மிணியும் கிருஷ்ணனும்பிரவே சிக்கிறார்கள்.

கி-ரு:—வாருங்கள் முனிவர் பெருமானே வந்தனம் செய்கின்றோம்.

வந்தனம்செய்கின்றார்கள்.

நா:—கல்யாண்! கல்யாண்!! இதோ இவ்வாசனத்தமர்க.

கிருஷ்ணன உட்காருகிறார் ருக்மிணி சத்யபாமையின் அருகே நிற்கிறாள்'

கி:—(முனிவரை நோக்கி) புன்னகையுடன் இவர்கள் யார் தங்களுடன் வந்தவர்களோ?

நா:—கிருஷ்ணா நீ யறியாததா ?

கி:—நானென்ன கண்டேன். தங்களைப் போன்ற ஞானியா? அல்லது தாங்கள் போல் எங்குஞ்சஞ்சரிப்பவனா? நான் இந்த துவாபகையிலிருக்கும் ஓர் இடையன்.

கா:--(நகைத்து) தெரியாதென்று சொல்வது நியாயமாயின் நான் தெரிவிக்கிறேன்.

அகவல்

என்ன நான் புகல ஈசா நினக்கு
யாவு நீ யறிந்த தியாவுநின் செயலே
ஆயினும் சொல்லென ஆக்ஞா பித்தனை
தாயினும் நல்லோய்! சாற்றுவன் கேணீ
தன்னிக ரில்லாத் தனியெழில் வாய்ந்த
இன்னவ னுந்தன் மைந்தன்பிரத்துயும்னன்

ருக்மிணிசத்தியபாமை இருவரும் அப்பா! வெனத்தழுவச்செல்கிறார்கள். கிருஷ்ணமூர்த்தி பொறுங்களெனத் தடுக்கிறார்.

இவன் வரலாறுமுன் இயம்புவன் பின்பிவ்
யுவதிதன் வரலா றோதுவ னையா!
இன்னவன் சிசுவா யிருந்தசமயம்
தனக்குப் பகையிவ னெனத் தெரிந் தசுரன்
சம்பரன் திருடிச் சாகரத் தெறிந்து
தன்பதி யிருந்து தனியரசாண்ட
பின்னொரு மீனப் பிள்ளையை விழுங்கிய
தன்னது வலைஞரின் வலையில கப்பட
நேர்ந்தது முதலவ னிறைபே ரருளால்
சேர்ந்தவம் மீனைச் செம்படவர் கண்டு
வியந்தனர் பின்புதம் வேந்திடத் ததனை
அளித்தன ரன்னோ னளித்த வெகுமதி
பெற்றுக் களித்தனர் பின்பக் கயலை
கொற்ற வனனுப்பின னற்றைப் பொழுதே
சமையலறைக்குச் சமைத்துணவாக்க
எமை யாளுடைய ஈசன தருளால்
அரிந்தவம் மீனினகடிருந் தச்சிசு

பரந்த விழியும் பங்கய மலரிற்
பொலிவுறு முகமும் புன்னகை வாயும்
கொண்டதோருரு வாய்க் குதித்தது தரையில்
அன்னது கண்ட அமுத வசனி
என்னும் பணிப்பெண் ணெடுத்து முத்தம்
பன்முறை யீந்து பரபரப் புடனே
மங்மைய ராசாம் மாயாவதி தன்
அங்கையி லளித்துச் சென்றன ளவளும்
பின்பவனே கிநான் பேசின னந்த
மகவாரெனவும் மகவவண் போந்ததன்
விவரமும்பின்ன ரவணிருந் தே கினன்
பின்னர் யிவனும் பெரியவ னுகித்
தன்பகை யாய சம்பரா சுரனை
மாய்த்திவண் போந்தனன் மாயவ! நினது
மலரடி வணங்கி நலமுறு மாறே

கி:—நன்று! நன்று!! சந்தோஷம். உமது கருணையை என்னுடைய ஒரு நாவால் புகழ முடியாது. ஆயிரம் நாவு படைத்த ஆதி சேஷந்தான் வரவேண்டும்:—எல்லாம் இறைவனது கட்டளைப் படி யென்பதை உலகம் அறிவதில்லை. மனமே குருவெனக் கொண்டு அதன் வழிநாடிக் கெடுகிறுர்கள். ஈசன் கட்டளையை மாற்ற யாரால் முடியும். இவன் கடலிலெறிந்து விட்டால் தப்பி விடுவானு? விதியை இவனுல் வெல்ல முடியுமா? பாவி களுக்கு முடிவு இப்படித்தான். போகட்டும். இம்மாதாசி யார்? வரலாறு யாது?

நா:—என் ஐயனே! நான் என்னத்தைச் சொல்லப் போகிறேன். தங்களுக்குத் தெரியாததெது? என் மூலமாகத் தங்களுக்குக் கேட்க விருப்பம் போலிருக்கிறது. சொல்லுகிறேன்.

அகவல்

விமலன் அமலன் விடையே றுமையன்
உமையொரு பாகன் உம்பர்க் கிறைவன்
கண்ணுற் காய்ந்த காமனை யடைய
எண்ணித் தவம தியற்றிய ரதியிவள்

மாயா வதியென மண்ணுல குற்றவள்
இன்னவள் சிறிய கன்னியாயிருக்கையில்
கண்டன னசுரன் காதல் கொண்டனன்
தொண்டையங் கனியிதழ்த் தோகையை யன்றே
எடுத்துப் போந்து படுத்தனன் சிறையில்
இந்நா ளளவும் அன்னவன் பொறுத்து
இருந்தன னிருந்தில் வேந்திழை சேரக்
கருத்திற் கொண்டு கனங்குழை யாளை
வருத்தின னதனைப் பொறுத்திடல் முடியா
தங்கங் குலைந்து சங்கரற் போற்றி
பிரத்யும் னனுமிப் பெருந்தகை யாய
தன்னுயிர் நாதனை மின்னிடை யடைந்தனள்
பின்னர் நடந்த தெவையும் பேசினேன்
ஐயனே துவாரகைக் கதிபனே யிவர்கள்
துய்ய திருமணம் துரிதமாய் முடித்தல்
நின்கட னென்றே நேயமோ டுரைத்தேன்
அன்புடன் முடிப்பா யதனை!

கி:—அப்படியே செய்வோம். ஐயா! மிகவும் சந்தோஷம்.

(கிருஷ்ணன் ருக்மிணி முதலானவர்களை பிரத்யும்னன் மாயாவதி இருவரும் நமஸ்கரிக்கிறார்கள். ருக்மிணி பிரத்யும்னனைத் தழுவிக் கொள்கிறாள்.)

கி:—முனிவரே! விவாக மூர்த்தம் செய்ய நாள் வேண்டாமா? நாளைய தினம் சுபதினமாயிருக்கிறது.

நா:—நடத்தி விடலாம்.

கி:—அப்படியே செய்வோம். அடே! சேவகா! நாளைய தினம் நமது பிரத்யும்னனுக்கு விவாக மகோற்சவம் ஆகையால் பட்டணத்தை யலங்கரிக்க ஜனங்களுக்குத் தெரிவி. நமது மாளிகையெங்கும் அலங்காரஞ் செய். தோரணங்கள் கட்டு. புரோகிதரை அழைத்துவா?

சே;—அப்படியே.

திரை மறைகிறது.

## விவாக மண்டபம்.

மணமகனும் மணமகளும் மாலை மாற்றிக் கொள்கிறார்கள், ஸ்ரீகிருஷ்ணன் ருக்மிணி சத்யபாமை இவர்கள் தம்பதியை வாழ்த்துகிறார்கள்,

தாதிகள்:— மங்களம்

ப—வி.

ஜயமங்களம்—நித்ய சுபமங்களம்.

சரணம்.

1 கோவர்த்தனதாரிக்கும்—கோபால கிருஷ்ணனுக்கும்
தேவகி பாலனுக்கும்-தெய்வானுகூலனுக்கும்—ஜய

2 தேவி சத்யபாமைக்கும்—ஸ்ரீஜய, ருக்மிணிக்கும்
தாவி லெழில் மாரனுக்கும்—தையல் ரதிதேவிக்கும்-ஜய

நாரதர் தம்பதியை ஆசீர்வதித்துச் செல்கிறார்.

### வாழ்த்து

வேத நான்கும் வாழ்க வெங்கும் விளங்குந் தேவ தேவன்சீர்ப்
பாதம் போற்றும் ஞான மோங்கப் பரமன் குமரன்புகழ் தினம்
ஓதுஞ் சுப்ர மண்ய னெஞ்சம் உவந்து செய்த தீந்தமிழ்ப்
போதம் நல்கும் நாட கமிப் புவன மெங்கு மோங்கவே.

## ஐந்தாமங்கம்

முற்றிற்று.

## மாயாவதி

முற்றிற்று.

58847

சுபம்! சுபம்!! சுபம்!!!